விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 31 ஞாயிற்றுக்கிழமை (15-07-2001) தொலைபேசி: 3378 ஒலி: 216

## வெளிநாடுகளில் நாளை ஆர்ப்பாட்டப்பேரணி

### ஈழத்தமிழ் மாணவர்கள் ஏற்பாடு

யாழ் பல்கலைக்கழக மாணவன் கி. திவ்வியன் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்தும் யாழ் பல்கலைக்கழகம் மூடப்பட்டதை கண்டித்தும் கனடா, அவுஸ்ரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் ஈழத்தமிழ் மாணவர்கள் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தவுள்ளன. நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ள இந்த கண்டன ஆர்ப்பாட்ட பேரணிகளை நடத்துவதற்கு கனடா பல்கலைக்கழக தமிழ் மாணவ ஒன்றியத் தலைவர் அழைப்பு விடுத்துள்ளார். [ம]

## ரணில் - ஜனாதிபதி சந்திப்பால் ஐ.தே.கட்சி பிளவுறும் அபாயம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா இரகசியமாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய சம்பவம் அம்பலத்திற்கு வந்ததை அடுத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள மோதல் சம்பவங்களை அடுத்து கட்சி பிளவுபடும் ஆபத்து ஏற்பட்டிருப்பதுடன் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமைக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், ரணில் விக்கிரமசிங்காவிற்குமிடையே இடம் பெற்ற இரகசிய பேச்சுவார்த்தையின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# காங்கேசன் தடுப்புமுகாமில் உள்ள திவ்வியனை, அமைச்சர் டக்ளஸ் நேரில் சென்று பார்வையிட்டார்!

## நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழகவிஞ்ஞான பீட மாணவனும் மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளருமான கிருஷ்ணசாமி திவ்வியனை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமானடக்ளஸ் தேவானந்தாநேற்று நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ள திவ்வியனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று நேரில் சென்று பார்வையிட்டதுடன் சுமார் இரண்டுமணி நேரம் திவ்வியனுடன் பேசியுள்ளார் இதன்போது தனதுசெயற்பாடுகள் பற்றியும் கைதுசெய்யப்பட்ட விதம் பற்றியும் திவ்வியன் எடுத்துக்கூறியதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்துபலாலியிலுள்ளஉயர் இராணுவ அதிகாரிகளை சந்தித்து திவ்வியன் விடுதலை தொடர்பாக எடுத்துக் கூறியுள்ளதுடன் திவ்வியனை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தி விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை கைது செய்யப்பட்டு காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதிவ்வியனை விடுவிப்பதற்குசட்டம்ஒழுங்கு

(10ம் பக்கம் பார்கக)

## வவு.பாடசாலைகள் நாளை முழு அளவில் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

வவுனியாவில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுவிக்கக்கோரி நாளை திங்கட்கிழமை முழு அளவிலான பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இப்பாடசாலை பகிஷ்கரிப்பு தொடர்பாக மூன்று கோரிக்கை அடங்கியதுண்டுப் பிரசுரமொன்று வவுனியா மாணவர் சமூகத்தினால் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை உடன் விடுவிக்குமாறும், மூடப்பட்ட பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்கும்படியும் மாணவர் சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அத்துண்டுப்பிரசுரத்தில் கேட்கப்பட்டுள்ளது. (வ

## ஸ்ரீ.ல.சு.கட்சி செயலர் பதவி டி. எம். ஜயரத்னாவுக்கு?

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின்பொதுச் செயலாளர் எஸ். பீ திசநாயக்க அப்பதவியிலிருந்து நீக்கப்படலாம நேற்று முன தினம் கூடவிருந்த மத்திய குழுக் கூட்டத்தில் இதுபற்றி ஆராயப்படவிருந்தது

பொதுச் செயலாளர் பதவியை ஏற்பதற்கு மகிந்த ராஜபக்சவும், அலவிமௌலானாவும் மறுத்துவிட்டனர். இதனால் பொ.ஐ. முன்னணியின் பொதுச் செயலாளராகவிருக்கும் டீ. எம். ஜயரத்னா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளராகவும் நியமிக்கப்படலாம்என்று அறியப்படுகிறது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்

[10ஆம் பக்கம் பார்க்க]

## கூட்டணியின் பொதுச்சபை இன்று கூடுகிறது

(கொழும்பு)

நாட்டில் தற்போது எழுந்துள்ள அரசியல் சூழ்நிலை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் சபை இன்று கூடி விவாதிக்கவுள்ளது.

இப்பொதுச்சபைக் கூட்டத்தில் வடக்கு கிழக்கு நிலவரம் தொடர்பாகவும், பாராளுமன்ற நீடிப்பு மற்றும் சர்வசன வாக்கெடுப்பு தொடர்பாகவும் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள்பற்றியும் யாழ்.பல்கலைக்கழகம் மூடப்பட்டமை தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. [ம]

## அம்பாறையில் ஹர்த்தால்

(மட்டக்களப்பு)

கல்முனைப் பஸ் நிலையத்தில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு முஸ்லிம் மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து நேற்று அம்பாறை

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் நடவடிக்கை சர்வ.நீதிமன்றில் முறையிட ஜே.வி.பி ஏற்பாடு

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்தது, மற்றும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு என்றபெயரில் கேலிக்கூத்து நடத்துவது பற்றி ம.வி.முன்னணி சர்வதேச நீதிமன்றத்தில் முறையிடத் தீர்மானித்துள்ளது.

இதற்கென கட்சியின் சர்வதேசத் தலைமை சட்டவாளர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறது இதனை நேற்று நிபபோன் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர். மகாநாட்டில் கட்சியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

சாதாரண பெரும்பான்மையைக் கூட கொண்டிராத அரசு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடத்துவது ஒரு கேலிக் கூத்து 2000 ஓகஸ்ட்டில் மக்களின் எதிர்ப்புக்காரணமாக மீளப்பெறப்பட்ட அரசிற்சட்டத்தை நிறைவேற்ற மீண்டும முயற்சிப்பது தெரிகிறது என்றார் அவர்.

## லொறி - சைக்கிள் விபத்தில் யாழ். செயலக பெண் ஊழியர் பலி

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற லொறி - சைக்கிள விபத்தில் சைக்கிளில் சென்ற பெண்மணி ஸ்தலத்திலேயே பரிதாபகரமான முறையில் பலியானார்.

பருத்தித்துறை வீதி சிறுப்பிட்டி சங்கத்தடியில் நேற்று மாலை 5-15 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் புத்தூர் மேற்கைச் சேர்ந்த கந்தையா ஸ்ரீ வள்ளிநாயகி (வயது 40) என்பவரே பலியானவராவார்.

விபத்தில் கொல்லப்பட்ட கந்தையா ஸ்ரீ வள்ளிநாயகி யாழ் செயலகத்தில் ஒய்வூதியக்கிளையில் பணியாற்றுபவராவார்.

இவ்விபத்துச் சம்பவத்தை அடுத்து லொறிச்சாரதி தலைமறைவாகியுள்ளார். விபத்து இடம்பெற்ற இடத்துக்கு விரைந்த அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் (வ-8)

## தன் பிள்ளைகளுக்கு நஞ்சூட்டிய தந்தை தான் அருந்தி மாய்ந்தார்

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக தானும் நஞ்சருந்தி பிள்ளைகளுக்கும் நஞ்சைப் பருக்கிய தந்தையொருவர் உயிரிழந்த சோகச்சம்பவம் நேற்று அராலி மேற்கில் இடம் பெற்றது.

இச்சம்பவத்தில் அராலி மேற்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிதம்பரநாதன் (வயது 45) என்பவரே உயிரிழந்தவராவார். இவரது பிள்ளைகளான வட்டு மத்திய கல்லூரியில் கல்வி பயிலும் கலைவாணி (வயது 11), பிரயாளன் (வயது 14) ஆகியோர் ஆபத்தான நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ந-104)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு கடாக் குட்டிகளுடன் ஜமுனாப் பாரி (பால் ஆடு), வான் கோழிகள், கோழிக் கூடுகள், என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இல. 75, செட்டித் தெரு, நல்லூர். (3341)

### பணிப் பெண் தேவை

இந்து மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள வீட்டில் வேலை. செய்வதற்கு பணிப் பெண் தேவை. 40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். தொடர்பு: விளம்பர இல- 121 வலம்புரி 15, வெள்ளாந் தெரு யாழ்ப்பாணம். (2221)

### கல்வி

**G. C. E 2002; 2003**

**பௌதீகவியல்**

**இணைந்த கணிதம்**

பல ஆண்டுகள் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்கள் மிகச் சிறப்பாகக் கற்பிக்கப்படும். மிகக் குறுகிய காலத்தில் முழுப் பாடத்திட்டமும் ஏராளமான பயிற்சிகளுடன் முடித்துக் கொடுக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் தினசரி 3 00 மணிக்குப் பின் சந்திக்கலாம். பெற்றோர் தொடர்பு கொள்ளவும். R பாலசுப்பிரமணியம் B Sc (Cey) Dip-in Ed, 17/1, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். (3345)


# நாட்டு மக்களின் உரிமைகளைப் பலப்படுத்தவே சர்வஜன வாக்கெடுப்பாம்

(கொழும்பு)

நாட்டு மக்களின் உரிமைகளைப் பலப்படுத்துவதே ஜனாதிபதியின் விருப்பம். இதற்காகவே அவர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த தீர்மானித்துள்ளார் என்று அமைச்சர் சரத் அமுனுகல கூறியுள்ளார்.

ரூபவாகினி தொலைக்காட்சி சேவைக்குப் பேட்டியளித்த போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1982 ஆம் ஆண்டு ஜே ஆர் ஜெயவர்த்தன நாட்டின் ஜனநாயகத்திற்கு கைவிலங்கிட்டது போன்ற தவறான நோக்கம் தற்போதைய ஜனாதிபதிக்கில்லை. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ஒழித்துக் கட்டுவதற்கு அவர் கூறியிருக்கும் யோசனைகள் இதனை உறுதிப்படுத்துகின்றது.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அரசாங்க சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்றவற்றை நிறுவுவதன் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை மேலும் பலப்படுத்த முடியும். ஆனால் இப்போதைய தேர்தல் முறை மக்கள் பிரதிநிதித்துவத்தை பாராளுமன்றத்தில் சரியான முறையில் பிரதிபலிக்கவில்லை அது நாட்டின் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். [உ-7]

## தொழில் சங்கங்களின் கூட்டம்

தொழிற் சங்க கட்டமைப்புக்களின் விசேட பொதுக் கூட்டம் இன்று மு. ப 10 30 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்தில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில், கைதுசெய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் விடுதலை தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் அனைத்து தொழிற் சங்கக் கட்டமைப்பு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (உ-6)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ஐ புவனேந்திரன் 2000-8 24 கல கல்வி நிர்வாக சேவை தரம் III க்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சின் கல்விச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது (உ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தில் வீதிகளில் பக்தர்களுக்கு இடையூறாக விற்பனையில் ஈடுபடுவது தடை செய்யப்படும் என நேற்றைய தினம் யாழ் மாநகர சபையில் நடைபெற்ற தொண்டர்களுடனான கலந்துரையாடலில் முடிவு எடுக்கப்பட்டது

மாநகர ஆணையாளர் இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் செ. ஜேம்ஸ் அம்புலன்ஸின் மாவட்ட ஆணையாளர் எஸ் செல்வரஞ்சன், பிரிவு உதவி யோகத்தர் கே. பிரசாந்தன், சாரண ஆணையாளர் எஸ் ஏகாம்பரநாதன், இ செ. சி சங்கப் பிரதிநிதி ரி உதயசூரியன், மநசவப் பிரதிநிதி கே. துஷ்யந்தன், பி சஞ்சிதகுமார், மக்கள் சேவைச் சங்க எஸ் சிவானந்தன், எஸ். தசேந்திரன் இந்து இளைஞர் பேரவையைச் சேர்ந்த இ தவகோபால் மற்றும் மாநகர சபை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

மேலும் நல்லூர் உற்சவம் சம்பந்தமான அடுத்த கலந்துரையாடலை எதிர்வரும் 18 ஆம் திகதி பி ப 2 30 க்கு நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-104)

## மாணவர்களின்....

பல்கலைக்கழக மாணவனின் கைது நடவடிக்கையினால் இது முற்றிலும்செயலிழந்து போயுள்ளது. ஆனால் குடாநாட்டு மக்களைச் சிறைப்படுத்திவைத்திருக்கின்ற அரசாங்கம் மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கின்ற அச்ச நிலையையும் குழப்ப நிலையையும் மேலும் சிக்கலாக்கும் வழிகளில் செயல்ப்பட்டு வருவதுடன் அதற்குச் சார்பாக பத்திரிகை அறிக்கைகளையும் விடுத்து வருகின்றது நேற்றைய தினப் பத்திரிகையில் படைத்தரப்பு தமது அனைத்து அராஜகங்களையும் நியாயப்படுத்தி பல்கலைக்கழகத்தின் அனைத்து செயல்களையும் முற்றிலும் தவறானது என குறிப்பிட்டிருந்தனர். இலங்கை அரசினைப் பற்றி, அதன் ஆயுதப்படைகளைப் பற்றி பல்கலைக்கழக மாணவர்களை விட அவற்றால் ஏற்பட்ட ஆறாத வடுக்களை சுமந்து வாழும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் நன்றாகத் தெரியும். நாம் சொல்லிப் புதிதாக புரிய வேண்டிய தேவை எமது மக்களுக்கு இல்லை;

இன்று வடக்குக் கிழக்கில் பெரும் பூகம்பமாக உருவாகி இருக்கும் மாணவர் போராட்டம் இன்னும் பல மடங்கு விஸ்வரூபம் எடுக்கும் சூழ்நிலையை அரச படைகள் ஏற்படுத்தி வருகின்றன. அரசபடைகள் பல்கலைக்கழக மாணவர்கள் புலிகளின் வற்புறுத்தலினாலும் புலிகளின் பின்னணியிலும் இருந்து செயற்படுதல் பல்கலைக்கழக நிர்வாகத்தையும் மாணவர்களின் கல்வியையும் சீழிக்க முற்பட்டு வருகிறார்கள் எனமக்கள் மத்தியில்விசமப் பிரச்சாரத்தினை மேற்கொண்டு அதிகாரிகளையும் மாணவர்களையும் அச்சுறுத்தி வருகின்றது

எமது போராட்டத்திற்கு பதில்கிட்டும்வரை பல்கலைக்கழக பகிஷ்கரிப்பு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் அன்பிற்குரிய மக்களே, மாணவர்களே, எமது போராட்டத்திற்கு உங்களது முழுமையான ஆதரவை தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம் மறு அறிவித்தல் வரை உங்களது ஒத்துழைப்பு தொடர்ச்சியாக எமக்கு கிடைக்கும் என நம்புகின்றோம்.

எமது மாணவச் செல்வங்களின் கல்விச்செயற்பாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவையிட்டு பல்கலைக்கழக மாணவராகிய நாம் மிகவும் மனம்வருந்துகின்றோம் எமது இளம் சமுதாயத்தினர் பல்வேறு கஷ்ரங்களின் மத்தியில் கல்வி கற்று பல்கலைக்கழகம் புகுந்து இத்தகைய ஒரு இராணுவத்தினரின் இரும்புப்பிடிக்குள் சிறைப்பிடிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு எதுவித மான உத்தரவாதமும் கிடையாது ஆகவே இந்த விடயத்தில் திவ்வியன் விடுதலையே அச்சமான நிலைக்கும் நிச்சய மற்ற நிலைக்கும் உள்ளாகி இருக்கும் மக்களுக்கு ஒருசமிக்ஞையாக அமையும்.

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஜூலைமாதம் 11 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி. வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

(நேற்றைய தொடர்ச்சி)

### சங்கானை

| | |
|---|---|
| 194920 பி | 195005 ஏ |
| 195005 பி | 195005 சி |
| 195011 ஏ | 195011 பி |
| 195101 ஏ | 195832 ஏ |
| 195832 பி | 195864 ஏ |
| 195908 ஏ | 195908 பி |
| 195908 சி | 195988 ஏ |
| 195988 பி | 195989 ஏ |
| 195989 பி | 195990 ஏ |
| 196 87 ஏ | 196087 பி |
| 196089 ஏ | 196953 ஏ |
| 196953 பி | 197050 ஏ |
| 197050 பி | 197054 ஏ |
| 197054 பி | 197879 ஏ |
| 197879 பி | 197879 சி |
| 197879 டி | 197879 ஈ |
| 197931 ஏ | 197931 பி |
| 198001 ஏ | 198013 ஏ |
| 198064 ஏ | 198121 ஏ |
| 198652 ஏ | 198665 ஏ |
| 198682 ஏ | 198682 பி |
| 198688 டி | 198682 சி |
| 198740 ஏ | 198740 பி |
| 198750 ஏ | 198750 பி |
| 198750 சி | 198830 ஏ |
| 198830 பி | 198882 ஏ |
| 198908 ஏ | 199327 ஏ |
| 199327 பி | 199380 ஏ |
| 199438 ஏ | 199438 பி |
| 199438 சி | 194468 ஏ |
| 201519 ஏ | 201612 ஏ |
| 201660 ஏ | |

ஜூலை மாதம் 12ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப்பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 165914 ஏ | 165914 பி |
| 194298 ஏ | 194298 பி |
| 194298 சி | 197072 ஏ |
| 197131 ஏ | 197159 ஏ |
| 197159 பி | 197984 சி |
| 197984 பி | 197984 ஏ |
| 198042 ஏ | 198130 ஏ |
| 198737 ஏ | 198862 ஏ |
| 198867 ஏ | 198903 ஏ |
| 198940 ஏ | 198941 ஏ |
| 199421 ஏ | 199421 பி |
| 199421 சி | 199421 டி |
| 199422 ஏ | 192422 பி |
| 192422 சி | 199440 சி |
| 199440 பி | 199440 ஏ |
| 199473 ஏ | 199474 ஏ |
| 199482 ஏ | 199491 ஏ |
| 199495 ஏ | 201506 ஏ |
| 201506 பி | 201518 ஏ |
| 201518 பி | 201576 பி |
| 201578 ஏ | 201578 பி |
| 201578 சி | 201605 ஏ |
| 201161 ஏ | 201161 பி |
| 201634 ஏ | 201634 பி |
| 201634 சி | 201643 ஏ |
| 201645 ஏ | 201645 பி |
| 201645 சி | 201705 ஏ |
| 201805 ஏ | 201859 ஏ |
| 201859 பி | 201859 சி |
| 201860 ஏ | 201860 பி |
| 201875 ஏ | 201917 ஏ |
| 201917 பி | 202042 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 178695 ஏ | 185113 ஏ |
| 195048 ஏ | 195892 ஏ |
| 195892 பி | 195892 சி |
| 196960 ஏ | 197047 ஏ |
| 197151 ஏ | 197170 பி |
| 197860 ஏ | 197860 ஏ |
| 198070 சி | 197970 ஏ |
| 179190 பி | 197970 சி |
| 197970 பி | 198030 ஏ |
| 198032 ஏ | 198659 ஏ |
| 198659 பி | 194728 ஏ |
| 198825 ஏ | 198825 பி |
| 198843 ஏ | 198852 ஏ |
| 198852 [illegible] | 198921 ஏ |
| 198930 ஏ | 198930 பி |
| 198930 சி | 198930 டி |
| 199402 ஏ | 199403 ஏ |
| 199435 ஏ | 199409 ஏ |
| 199469 பி | 199409 சி |
| 199470 ஏ | 199470 பி |
| 199510 ஏ | 199510 பி |
| 199510 சி | 199591 ஏ |
| 199591 பி | 203474 ஏ |
| 201561 ஏ | 201561 பி |
| 201561 சி | 201742 ஏ |
| 201754 ஏ | 201754 பி |
| 201809 ஏ | 201885 ஏ |
| 201885 பி | 201892 ஏ |
| 202019 ஏ | 202096 ஏ |
| 202096 பி | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 170255 ஏ | 170255 பி |
| 170255 சி | 190648 ஏ |
| 193624 ஏ | 193645 ஏ |
| 193645 பி | 193645 சி |

(தொடரும்)

## விரிவடையும் ராஜதந்திர தொடர்புகள்

(கொழும்பு)

ரஜிகிஸ்தான், பொஸ்னியா, ஹேசிகோவினா ஆகிய நாடுகளுடன் முழு அளவிலான ராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்த இலங்கை முடிவு செய்துள்ளது.

இலங்கையினதும் - ரஜிகிஸ்தான வெளியுறவு அமைச்சுக்கள் தூதுவர்களை பரிமாற முடிவு செய்துள்ளன.

பொஸ்னியாவினதும், ஹேசிகோவினாவினதும் ஐ நா.வுக்கான தூதுவர், இலங்கையின் ஐ நா வுக்கான தூதுவர் ஜோன் டீ. சேரத்துடன் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். (உ)


## யாழ்.சேவை-நேயர்களுக்கு விளம்பரதாரர்களுக்கு

செனித் மார்க்கெட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் ஸ்தாபனத்தாரின் நிர்வாகத்தின் கீழ் எமது ஏகோபித்த நேயர்களின் விளம்பரதாரர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இலக்கம் 220, ஸ்ரான்லி வீதியில் Dr பரமசோதிநாதர் மெடிக்கல் கிளினிக் கட்டடத்தில் எமது விசேட கருமபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது ஆகவே உங்களது பிறந்தநாள் வாழ்த்துக்கள், கோயில் விளம்பரங்கள், நாடகங்கள், வர்த்தக விளம்பரங்கள் மற்றும் விளம்பரங்களை நீங்கள் கையளிக்கலாம் என்பதனை தெரிவித்துக் கொள்கிறோம். வியாபார நேரம் காலை 8 30 முதல் மாலை 5, 00 மணி வரை.

தலைமையகம்
19/3, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

ஜோ. எக்ட்டன்
நிர்வாகி.

(C-2207)

## தேவை

**அலுவலக உதவியாளர்**
**எழுதுவினைஞர்**
**விளம்பரம் சேகரிப்போர் (பெண்கள்)**

கடும் உழைப்பு உள்ள அலுவலக உதவியாளர்கள் / விளம்பரம் சேகரிப்போர் தேவை. அண்மையில் பெற்ற நற்சாட்சி பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சாட்சி பத்திரம், கல்வித் தகைமைகளுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

உருவாக்கல் இயக்குநர்,
செனித் மார்க்கெட்டிங்& அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, முன் ஒழுங்கை
காலை 11-00 மணி முதல் பி. ப. 2-00 மணிவரை

(C-2206)

## கண்காட்சி

(மானிப்பாய்)

கிராம அபிவிருத்தித் திணைக்களம் மாவட்ட ரீதியாக நடத்தி வரும் டிப்ளோமா பயிற்சியின் போது, செய்யப்பட்ட பொருட்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நடத்தப்படும் கண்காட்சியில் பார்வையிட்டு புள்ளி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது

இந்த அடிப்படையில்சிறந்த கண்காட்சியை அமைக்கும் ஆசிரியைக்கு பாராட்டுசான்றிதழும், சிறப்புக் கண்காட்சிப் பொருட்களை,வைத்த மாணவிக்கு பணப்பரிசும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது

மேலும் தையல் பொறுப்பாசிரியர்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிட்ட பிரகாரம், திணைக்களப் பணிப்பாளர் அமைச்சின் செயலாளரினால் கொடுக்கப்படும் நற்சான்றிதழ் அடிப்படையில் ஆசிரியை ஒருவர் மாவட்டத்தின் சிரேஷ்ட தையல் போதனாசிரியையாக நியமிக்கப்படுவர்,

இத் தெரிவும் மேற்படி கண்காட்சியின் போது இடம் பெறும். (உ-120)

# 2001 ஆம் ஆண்டிற்கானசிறந்தவிவசாயிகளாக போதனாசிரியர் பிரிவுதோறும் மூவர் தெரிவு

[யாழ்ப்பாணம்]

சிறந்த விவசாயிகளை இனங்கண்டு கௌரவப்படுத்தல், உற்பத்தியை அதிகரிக்க பொருத்தமான தொழில் நுட்பப்பாவனையை ஊக்குவித்தல், விவசாய முயற்சியில் ஆர்வத்தைஏற்படுத்தல்ஆகியவற்றை நோக்காகக்கொண்டு 2001 ஆம் ஆண்டில் சிறந்த விவசாயிகளுக்கான பரிசு வழங்கும் திட்டத்திற்கு விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்க உதவி விவசாயப் பணிப்பாளர் ச. சின்னத்துரை இது தொடர்பாகத் தகவல்தருகையில்;

ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர்பிரிவில் இருந்தும் நெற்செய்கைக்கான சிறந்த விவசாயி, உப உணவு பயிர்ச் செய்கைக்கான சிறந்த விவசாயி, வதிவிட வேளாண்மைச் செய்கைக்கான சிறந்த விவசாயி ஆகிய மூவர் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப் படும் எனவும்,

விண்ணப்பப்படிவத்தை தங்கள் பிரிவு விவசாயப் போதனாசிரியர்களிடம் எதிர் வரு 20 ஆ திகதிக்குப் பின்னர்திங்கள்,புதன் கிழமைகளில் பெற்று, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை எதிர்வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைத்தல் வேண்டும் எனவும்,

மேலதிக விபரங்களைத் தங்கள் பகுதிப்போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

மேற்படி போட்டியில் பரிசுக்குத் தெரிவான சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் வைபவம் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. [உ]

## தென்மராட்சி வலய ஓவியப் போட்டி முடிவுகள்

[மந்திகை]

தென்மராட்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட சுகாதார வார ஓவியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பரிசுக்குத் தெரிவானவர்களின் விபரங்கள் வருமாறு.

ஈ. பிரதீபன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ச, தயாநீதன்- சாவகச்சேரி றிபேக் கல்லூரி

சு. பிருந்தாவன்- சாவகச்சேரிஇந்துக் கல்லூரி

க. நிஷாந்-மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்

சி சசிகரன்-பளை மத்திய கல்லூரி

க. தனஞ்ஜெயன்- சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(உ-23)

## அமைச்சர்ஏற்பாட்டில் கல்வி மன்றக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மத்திய மாகாண கல்வி உயரதிகாரிகள் ,யாழ். மாவட்டக் கல்வி உயரதிகாரிகள், யாழ். மாவட்டக் கல்வி மான்கள்,யாழ் மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். மாவட்ட அதிபர்கள் ஆகியோரை உள்ளடக்கிய கல்வி மன்ற கருத்தரங்கை விரைவில் நடத்த ஏற்பாடு செய்துள்ளார்;

இதற்கு முன்னோடி நடவடிக்கையாக, எதிர்வரும் செவ்வாய்க் கிழமை மு.ப 10.00மணிக்கு வடக்கு அபிவிருத்தி, புனர் வாழ்வு, புனரமைப்பு, மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சின் யாழ். அலுவலகத்தில் யாழ் மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் யாழ் மாவட்ட அதிபர்கள் கலந்து கொள்ளும் கருத்தரங்கு ஒன்று நடைபெற ஏற்பாடாகியுள்ளது;

இக் கருத்தரங்கில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு இன்றைய சூழலில் யாழ்.மாவட்டக் கல்வித் தரம் குறித்தும், கல்வி மேம்பாட்டில் எதிர் கொள்ளப்படும் பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராய்வதுடன் கல்வியை மேம்படுத்தவுள்ள செயற் திட்டங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே செவ்வாயன்று நடைபெறவுள்ள மேற்படி கருத்தரங்கில் சம்பந்தப்பட்ட அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (உ)

## மாரிமுத்துவின் இடத்திற்கு யோகராஜன்

[கொழும்பு]

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம். பி. மாரிமுத்து தனது எம். பி. பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

இவரது இடத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஆர். யோகராஜன் நியமிக்கப்படவுள்ளார்.

எம். பி. பதவியை இராஜினாமாச் செய்த மாரிமுத்து ஜோர்தானுக்கு தூதுவராகச் செல்லவுள்ளார். (வ)

## இறை மகிமைக்குள் சென்றார்

(புலோலி)

கனடா மெதடிஸ்த திருச்சபையில் குருப்பட்டம் தரித்து அங்கேயே குருத் தொண்டாற்றி வந்தயாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வணக்கத்திற்குரிய கந்தையா நல்லருளானந்தம் அண்மையில் இறை மகிமைக்குள் சென்றுள்ளார். [உ-52]

## பல்கலை ஊழியர் நேற்று அடையாளஉண்ணாவிரதம்

### 400இற்கும் அதிகமானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவன் கிருஷ்ணசாமி-திவ்வியனை விடுவிக்கக் கோரியும் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ள யாழ்.பல்கலைக் கழகத்தினை விரைவில் திறக்கக் கோரியும் நேற்றைய தினம் யாழ்.பல்கலைக் கழக ஊழியர் சங்கத்தினர் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தினை மேற் கொண்டனர்;

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் மண்டப முன்றலில் 400 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் காலை 9.00 மணிக்கு உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்;

பிற்பகல் 4.00 மணிவரை இப்போராட்டம் தொடர்ந்தது,

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எஸ்-கலாராஜ் இது தொடர்பாக கருத்துத தெரிவிக்கையில், மாணவர்களின் கல்விக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றுய:

அரச நிர்வாகிகள் எமது கோரிக்கைக்கு மதிப்பளித்து 25 வருடமாக இயங்கி வந்த யாழ். பல்கலைக்கழகத்தினை மீளத் திறக்க ஆவன செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பி.ப.4 00 மணிக்கு ஊழியர்சங்கக்கூட்டம்நடைபெற்ற போது திங்கட்கிழமை இடம்பெறும் கூட்டத்தில் தாம் தொடர்ந்தும் உண்ணாவிரதம் மேற்கொள்வது தொடர்பாக தீர்மானிக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப் பட்டது; (உ-6)

## இழப்பீட்டிற்கான இரண்டாங்கட்ட கொடுப்பனவு விரைவில்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வன்செயல்களால் சேதமடைந்த வீடுகளின்இழப்பீட்டிற்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கான வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு அழைக்கப்பட்டு கொடுப்பனவிற்கான வவுச்சரில் முத்திரையிட்டு கையொப்பமிடும் பணி தற்போது இடம்பெறுகின்றது.

கொடுப்பனவுக்கான காசோலைகள் விரைவில் இவர்களதுவங்கிக்கணக்குக்கு அனுப்பி வைக்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (உ-120)

## உதை பந்தாட்ட சுற்றுப போட்டி

(கோப்பாய்)

யாழ் கல்விவலய உதைபந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 12 வயதுக்குட்பட்டவர்களின் அணியில கோப்பாய்க் கல்விக் கோட்டத்திலிருந்து 12 பாடசாலைகள் பங்குபற்றவுள்ளன.

இப் போட்டி நிகழ்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி மைதானத்தில நடைபெறவுள்ளதாக கோப்பாய் கோட்ட உதைபந்தாட்டச் சங்க உறுப்பினரும் ஆவரங்கால் நடராஜ ராமலிங்க வித்தியாலய அதிபருமான த. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். [உ-79]

## கண்டனத் தீர்மானம்

(கொழும்பு)

யாழ்;பல்கலைக் கழக மாணவன் திவ்வியனை உடனடியாக விடுதலை செய்வது, மூடப்பட்ட யாழ்.பல்கலைக் கழகத்தை உடன்திறப்பது பற்றியும் அல்லாரைபாலியல் வல்லுறவுச் சம்பவம்தொடர்பாகவும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் அடங்கிய 11 தமிழ்க் கட்சிகள் அண்மையில் கூடிக் கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ளன. (வ)

## பிரதேச செயலக நிரந்தரக் கட்டடத்திற்கு காணி கொள்வனவு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகத்திற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான காணி யாழ். பருத்தித்துறை பிரதான வீதியில் அமைந்துள்ள மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் கொள்வனவு செய்வதற்குதீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று பிரதேச செயலக மாநாட்டுமண்டபத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற காணிக் கொள்வனவு தொடர்பான ஆலோசனைக்கூட்டத்தில்இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி வீதியில் அமைந்துள்ள தனியாருக்குச்சொந்தமான 14 பரப்புக் காணியை கொள்வனவு செய்வது என்றும்,

இதற்கான நிதியினைபொது மக்கள் மற்றும நலன் விரும்பிகளிடம் பெறுவது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது.

இந் நிகழ்வில்உதவித்திட்டமிடல் பணிப்பாளர் கு. நடராசா, நிர்வாக அதிகாரி ஆர். சிவபுண்ணியம, சமாதான நீதவான் எம். சுந்தரலிங்கம், கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (உ-23)

## கிராம மட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(மானிப்பாய்)

வடக்கு- கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் கிராம மட்டத்தில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்த முடிவு செய்துள்ளது,

கிராம மட்டத்திலான சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் அவற்றை ஒழுங்கமைத்து சரியான நுட்பங்களுடன் நடைமுறைப்படுத்துவதற்கும் ஏதுவாக இவ்வருடத்திலிருந்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கிராமிய மட்டத்தில் நடத்தத் தீர்மானிக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [உ-120]

★ இன்று வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் கொடியேற்றம்.

## நல்லவிதம் வாழ அருள் தா

தொல்லைமறை யாவும் பல்விதம தாகச்
சொல்லுவயித் தீசு வரநாதா
துள்ளுவிடை யேறும் வெள்ளிமலை வாசர்
அள்ளியருள் வாரக் கொடியேறி
முல்லைநகை பேசு நல்லவிதழ் மாது
மையல் கொளு வாலாம் பிகையோடு
உள்ளமது நாளும் கொள்ளைகொழு மாறு
உள்ளுணர்வி லூறி வருவோனே!
புல்லறிவி னோடிங் கல்லலுறு வேனும்
நல்லறிவு காண அருளாயோ?
புள்ளிமயி லேறு வள்ளிமண வாள
வள்ளலுப தேசம் பெறுவோனே!
வல்லவினை மாள நல்லவிதம் வாழ
வல்லருளை நீயுந் தரவேணும்
உள்ளலென நாடு முள்ளமதிழ வாழும்
வண்ணைநகர் மேவு மிறையோனே!

நாயன்மார்கட்டு
இராசையா குகதாசன்

# அமைதி பேணுமாறு மாணவர்க்கு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)
மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும் என்று ஈ பி டி பி அமைப்பு கோரியுள்ளது.

ஈ பி டி பி யின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளர் க.மணிபல்லவா ஜன் மாணவர்களுக்கு விடுத்த வேண்டுகோளில்,

மாணவர்கள் தமது கல்வியைத் தொடர அமைதிபேண வேண்டும். வழமையான கடமைகள் தொடர குந்தகம் ஏற்படுத்தாமல் கண்ணியமாக நடந்துகொள்ள வேண்டும். ஒரு சிலரின் பிழையான போக்குக்கு துணைபோவதால் ஒட்டுமொத்தமாக மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுள்ளார்.

[வ-8]

களவாடப்பட்ட பொருட்களுடன்

# பொலிஸ் நிலையத்தில் வாகனங்கள் தடுத்துவைப்பு

[யாழ்ப்பாணம்]
ஊர்காவற்றுறை மற்றும் கொழும்புத்துறைப் பகுதிகளில் பொதுமக்களின் வீடுகளில் இருந்து களவாக ஏற்றி வரப்பட்ட கதவுகள், யன்னல்கள், நிலைகள் உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருட்களுடன் வந்த வாகனங்கள் யாழ் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் சாம் பொருட்களுடன் வாகனங்களைத் தடுத்துவைத்துள்ளதாகவும், கள்வரின் செயற்பாடுகளில் இருந்து பொதுமக்களை விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இவ்வாறான திருட்டுப்பொருட்கள் எடுத்து வரப்படுவதை அவதானித்தால் உடன் தமக்கு அறிவிக்க வேண்டும் எனவும்.

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இவ்வாறான செயல்களை முறியடிக்க முடியும் எனவும் மேலும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

[உ-10]

# பகிஷ்கரிப்பை கைவிட்டு பாடசாலைக்குச் செல்க!

யாழ். பொலிஸ் அதிகாரி வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களை பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாடசாலைக் கல்வியைத் தொடருமாறு யாழ் பொலிஸ் நிலைய அதிகாரி கொல்லுரே வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாணவர்கள் தம் கல்வியைத் தங்குதடையின்றித் தொடர பொலிஸார் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கத் தயாராக உள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

# ஜனநாயக விரோத நடவடிக்கையைமுறியடிக்க கட்சிகளே ஒன்றிணைக!

சுதந்திர ஊடகவியலாளர் அறைகூவல்

(கொழும்பு)
புதிய அரசியற் சட்டம் பற்றிய விபரங்களை முதலில் மக்களுக்குத் தெரிவித்த பின்னரே மக்களின் அங்கீகாரத்தை கோர வேண்டும்.

தாம் ஆட்சியிலிருப்பதற்கும் மக்களை இருட்டில்வைத்திருப்பதற்கும் செய்யப்படும் சதிஇது.

இதனால்ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்து ஏற்பட இடமுண்டு எனவேசகல அரசியல் கட்சிகளும் ஒன்றுசேர்ந்துஜனநாயகத்திற்கு விரோதமான இந்த நடவடிக்கையை தோற்கடிக்க முன்வர வேண்டும் என்று சுதந்திர ஊடகவியலாளர் அமைப்பு கேட்டுள்ளது. (உ)

# ஜனாதிபதியின் செயலுக்கு பட்டிவீரக்கோன் பாராட்டு

(கொழும்பு)
அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளை ஜனாதிபதி தக்க நேரத்தில் முறியடித்துள்ளார் என அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

மக்கள் விரோத சக்திகளும் முதலாளி வர்க்கத்தினரும் நாட்டின் முற்போக்கு அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆனால் அரசாங்கம் மக்களின் ஆதரவுடனும் தீர்க்கதரிசனத்துடனும் தகுந்த நடவடிக்கை எடுத்துள்ளது இது பாராட்டிற்குரியதாகும்.

தமிழ் மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் மீது எல்லையற்ற நம்பிக்கை வைத்துள்ளனர். எனவே அரசாங்கம் அந்த நம்பிக்கையை பாழடிக்கமாட்டாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-5)

# சர்வஜன வாக்கெடுப்பு யாழ். மாவட்டத்தில் பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
அடுத்த மாதம் நடைபெறவுள்ள சர்வஜன வாக்கெடுப்புக்கான பணிகளை யாழ்ப்பாணத் தேர்தல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

இவ் வாக்கெடுப்புக்கள் யாழ் மாவட்டத்தில் 452 நிலையங்களில் இடம்பெறும் எனவும்,

வாக்கெடுப்பு நிலையங்களில் பணி புரிபவர்களின் பெயர் விபரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கான பயிற்சி வகுப்புகளை பிரதேச செயலர் ரீதியாக நடத்தத் தீர்மானித்திருப்பதாகவும் தேர்தல் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ-7)

வல்லை வெளியில் தொடரும்

# சட்டவிரோத மண் அகழ்வைத் தடுப்பதில் ச. ச. நிலையம் ஈடுபாடு

(புலோலி)
வல்லைவெளிப் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழ்ப்படுவதைத் தடை செய்யவும் மரங்கள் அழிக்கப்படுவதைத் தடுப்பதற்குமான நடவடிக்கைகளை கரவெட்டி பிரதேச செயலரின் அனுசரணையுடன் கரவெட்டி கலைநேசன் சனசமூக நிலையம் மேற்கொண்டுள்ளது.

வல்லைவெளிப் பகுதியில் மண் அகழப்படுவதால் ஏற்படும் பேராபத்தைத் தடுப்பதற்கும், மரங்கள் அழிக்கப்படுவதால் இயற்கைவளங்கள் அற்றுப்போவதையும் தடை செய்து சூழலைப் பாதுகாப்பதற்குமே இந்த நடவடிக்கைகளைச் சனசமூக நிலையம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென சனசமூக நிலையத் தலைவர் வி. தயாளசௌந்தரம் தலைமையில் 5உறுப்பினர்களைக்கொண்ட சூழல் பாதுகாப்புக் குழுவொன்றும் தெரிவாகியுள்ளது.

இக்குழு வல்லைவெளிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மண் அகழப்படுவதையும், மரங்கள் அழிக்கப்படுவதையும் இப்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வீதியோரங்களில் நிழல் தரும் மரங்களையும், பயன் தரும் மரங்களையும் நாட்டவுள்ளதாகவும், வீதியோரங்களைசிரமதானம் மூலம் திருத்தி புனரமைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் இக்குழுவினர் தெரிவித்தனர்.

(உ-52)

# வேலைக்குச் சென்ற வாலிபனைக் காணோம்

(யாழ்ப்பாணம்)
ஆடியபாதம் வீதி நல்லூர் வடக்கைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சந்திரகுமார் (வயது 19 என்ற இளைஞனை கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் காணவில்லை என தாயாரினால் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் நேற்றுமுன் தினம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் ஒரு கூலித் தொழிலாளி எனவும் சம்பவதினம் வீட்டிலிருந்து வேலைக்குச் சென்றவர், இன்றுவரை வீடு திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

தற்கொலையாளிகளின் அங்கிகள் மீட்பு

(வவுனியா)
வவுனியாசிதம்பரபுரம் குடியேற்றத்திட்டபகுதியில் தற்கொலைதாரியின் அங்கிகள் இரண்டை படையினர்கண்டுபிடித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்குள் உள்ள சிதம்பரபுரம் குடியேற்றத்திட்டப் பகுதியிலேயே தற்கொலைக் குண்டுதாரிகள் அணியும் இரு அங்கிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் வெடிபொருட்கள் நிரப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் படையினர் தெரிவித்துள்ளனர். (ம)

# தற்போதைய நிலைகுறித்து சர்வதேசஇந்துமதகுருமார் அதிர்ச்சி வேதனை

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் சமாதானத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டமையும் அதனால் யாழ் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமையும் எமக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது.

இவ்வாறு யாழ் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் கைது செய்யப்பட்டமை தொடர்பான பிரச்சினைக்கு சுமுகமானதீர்வு கண்டு யாழ் பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறந்து கல்விச் செயற்பாட்டைத் தொடர அனைவரும் முயல வேண்டும்.

அமைதி இன்மை ஏற்படக்கூடிய சூழலைத் தவிர்த்து மாணவர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் கைது செய்யப்பட்ட மாணவன் திவ்வியனை விடுதலை செய்து யாழ் பல்கலைக்கழக செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும்.

(இ)

# நிதிஒதுக்கீடு சம்பந்தமான

கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம)
யாழ். குடாநாட்டில் அபிவிருத்தியை தங்குதடையின்றி முன்னெடுக்கும் முகமாக ஆலயங்களின் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திக் குழுவின் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா, அமைச்சின் யாழ் அலுவலகத்தில் திங்கள், புதன் கிழமைகளில் சந்தித்து யாழ். மாவட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் சம்பந்தமாக கலந்துரையாடவுள்ளதால்,

ஏற்கனவே நிதிஒதுக்கீடுகள் சம்பந்தமாக தொடர்பு கொண்டு நிதிஒதுக்கீட்டைப் பெற சிபார்சு செய்யப்பட்டவர்கள். இந் நாட்களில் சமுகம் தந்து தங்கள் நிதி ஒதுக்கீட்டினைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கால்வாய்

நோய் பரவுகிறது

(வவுனியா)
அம்பலப் பெருமாள் குளம் பகுதியில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவிவருகிறது இதனால் இப்பகுதியிலிருந்து பால்விற்பனை, கொள்வனவு செய்வதையும் இறைச்சிக்காக கால்நடைகளை வெட்டுவதையும் தமிழீழ சுகாதார சேவையினமல்லாவிப்பிரதேச சுகாதாரப்பிரிவினர் முற்றாகத் தடைசெய்துள்ளதாக அறிவித்துள்ளனர். (உ-8)

# குடிசன மதிப்பீடு குடாநாட்டில் இடம்பெறா

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிக் குடிசன மதிப்பீடுகள் யாழ் குடாநாட்டில் இடம் பெறமாட்டாது என அறிய முடிகிறது.

இடம் பெறவுள்ள குடிசன மதிப்பீட்டினை யாழ் குடாநாட்டிலும் நடத்துமாறு குடிசன மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்ததற்கு சாதகமான பதில் எதனையும் யாழ் செயலகம் இதுவரை அனுப்பவில்லை.

இதற்கு மாறாக குடாநாட்டில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ள முடியாமைக்கான நிலைமையினை விளக்கி அறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும் இந்த மதிப்பீட்டினை மேற்கொள்வதில் பல்வேறுபட்ட இடையூறுகள் உள்ளதாகவும் இதனை சாதாரணமான ஒரு விடயமாகக் கருதி விட முடியாதெனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும், இக்குடிசன மதிப்பீட்டிற்கு பல தரப்பில் இருந்து எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இம் மதிப்பீட்டுப்பணிகள் பிற்போடப்பட்டமையும் தெரிந்ததே. (உ-10)

# பாடசாலைகள்தோறும் மூலிகைத்தோட்டம் அமைப்பது அவசியம்

(யாழ்ப்பாணம்)
பாடசாலைகளில் ஒருபாட வேளையாவது போகாசனம், தியானம் ஒழுக்கபோதனை போன்றவற்றிற்காக ஒதுக்கப்படுவது உடல், உள மேம்பாட்டிற்கு அவசியமாகிறது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் அதிபர் க செல்வகுமரன் தலைமையில் அண்மையில் 'மூலிகை மருத்துவ' இரசாயனப் பகுப்பாய்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

நோய்களின் ஆரம்ப நிலைத் தடுப்பிற்கும் நோய் வந்தபின் குணமாக்கலுக்கும் பாடசாலைகள் தோறும் விவசாயத் தோட்டத்துடன் இணைந்ததாக மூலிகைத் தோட்டம் அமைத்தல் வேண்டும்.

அத்துடன் நின்றுவிடாது பாலர்பாடசாலை, வீட்டுத் தோட்டம் ஆகியவற்றிலும் மூலிகைத் தோட்டங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (உ-6)

# யாழ். வலய கணித, விஞ்ஞான
# சித்திர கண்காட்சி போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கணித விஞ்ஞான வினாவிடைப் போட்டி சித்திரக்கண்காட்சிப்போட்டி ஆகியவற்றின் யாழ் வலய முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
முடிவுகளின் விபரம்வருமாறு;

### கணித விஞ்ஞானப் போட்டி

**பிரிவு:- I (தரம் 6, 7, 8)**
முதலாம் இடம்:- யா/ இந்துககல்லூரி
இரண்டாம் இடம்:- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
மூன்றாம் இடம்:- யா/ புனித சம்பத்திரிசியார் கல்லூரி

**பிரிவு ii (தரம் 9, 10, 11)**
முதலாம் இடம் யா/ இந்துக் கல்லூரி
இரண்டாம் இடம்;- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
மூன்றாம் இடம்:- யா/பரியோவரன் கல்லூரி

**பிரிவு iii (தரம் 12 13)**
முதலாம் இடம்:- யா/வேம்படி மகளிர் கல்லூரி
இரண்டாம் இடம்:- யா/ இந்துக்கல்லூரி
மூன்றாம் இடம்:- யா/பரியோவான் கல்லூரி

### சித்திரக்கண்காட்சிப் போட்டி

**ஆரம்ப மேற் பிரிவு(தரம் 4,5)**
முதலாம் இடம்:- பா. அங்குசன் யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி
இரண்டாம் இடம்:- அ. ஜெறோம் யா/கொழும்புத்துறை இ. ம. வி
மூன்றாம் இடம்:- பி-நந்திகரன யா/ புனித பொஸ்கோ வித்தியாலயம

**கனிஷ்ட பிரிவு (தரம் 6,7,8)**
முதலாம் இடம: ஆ ரஜீவ் யா/ கோண்டாவில் பரம்சோதி வித்.
இரண்டாம் இடம்:-இ. தர்மிகா யா/ கன்னியர் மடம் ம. வி
மூன்றாம் இடம்;- க. பூர்ணிமா யா/வேம்படி மகளிர் கல்லூரி

**சிரேஷ்டபிரிவு(தரம்9, 10, 11)**
முதலாம் இடம்:- சு. விஜயாலயன் யா/ மத்தியகல்லூரி
இரண்டாம் இடம்:- து. டினேஷ்கான் யா/ கனகரத்தினம் ம.ம- வி
மூன்றாம் இடம்:- ஆ அகிலன, வே .சுஜீவன் யா/ இந்துக் கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு (தரம் 12, 13)**
முதலாம் இடம்:- எஸ். ஜே. ஸ்ராலின் யா/ புனித பத்திரியார் கல்லூரி
இரண்டாம் இடம்:- ச, சாரூபா யா/ இந்து மகளிர் கல்லூரி
மூன்றாம இடம்:- ரமேஸ் பிரகாஷ் யா/ செங்குந்தா இந்துக் கல்லூரி

**ஆசிரியர் பிரிவு**
முதலாம இடம்:- திருமதி கோமதி செலவநாதன் யா/ மததிய கல்லூரி
இரண்டாம் இடம்:- செ. ஸ்ரீலோகநாதன யா/ பத்திரிசியார் கலலூரி
மூன்றாம் இடம் எம். டொமினிசஜீவா யா/ மத்திய கல்லூரி, ப. இவகரன் யா/ செஙகுந்தா இந்துக்கல்லூரி, வ. பாலமுருகன யா/ மத்திய கலலூரி (உ-10)

## பாராளுமன்றத்திற்கான தேர்தல்நடத்தப்படமாட்டாது
## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரைவில் சந்திக்கவுள்ளார்;
இதற்கான தீர்மானம் ஒன்றை நேற்று நடைபெற்ற மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப் பட்டுள்ளது.
இக் கூட்டத்தில் ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படடதும் பாராளுமன்றம் தொடர்ந்தும் இருக்கும் என்றும் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படமாட்டது என்றும் தெரிவித்துள்ளார்;
அண்மையில் நடந்த மத்திய குழுக் கூட்டத்தில் சுதந்திரக் கடசியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமானஎஸ். பி திஸநாயக்கா கலந்து கொளளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

பல்கலை மாணவன் விடுதலைக்கு
## விநாயகமூர்த்தி எம்.பி வேண்டிய நடவடிக்கை

(கொழுமபு)
யாழ். பல்கலைக்கழக மாணவன் விடுதலை மற்றும், பல்கலைக்கழகத்தை மீளத் திறபபது தொடர்பாக யாழ். மாவட்டபாரளுமன்ற உறுப்பினர் அ விநாயக மூர்த்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விடுத்த செய்திக் குறிப்பில இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது இதில் மேலும குறிபபிடப்பட்டுள்ளதாவது;
மாணவன் விடுவிக்கப்பட்டு பல்கலைக் கழகம் திறக்கப் படாது விட்டால் வடக்கு-கிழக்கு எங்கும் இப போராட்டம பரவி, க. பொ த.உயர்தர பரீட்சைக்குத் தயார் செய்யும் மாணவர்களைப் பெரிதும் பாதிக்கும்
இந்த விடயததில் அரசு தலையிட்டு நிலைமையைச் சீர செய்ய வேண்டும், (உ)

சொற் போர் பற் போரானது
## முகத்தில் கடிகாயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(புலோலி)
இருவருக்கிடையே ஏற்பட்ட தகராறினால், ஒருவரை மற்றவர் கடித்து முகத்தில் காயத்தை ஏற்படுத்தியுள்ளார்.
கடிகாயத்திற்குள்ளானவர் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்படடுள்ளார்.
பருத்தித்துறை சந்தை மேற்கு ஒழுங்கையில் வசிக்கும் வி ஸ்ரீலிங்கம் [வயது38] என்பவரே கடிகாயங்களுக்குக் குள்ளானவராவர்.
இது பற்றி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர் [உ-52]

## தோல்வியின்வெளிப்பாடே பாராளுமன்ற ஒத்திவைப்பு
### லங்கா தே.கா. தலைவர் கூற்று

(கொழும்பு)
நம்பிக்கையிலலாத் தீர்மானத்தை தோற்கடிக்க முடியாது என்பதை நன்கு உணர்ந்த நிலையில் ஜனாதிபதி குமாரதுங்க பாராளுமன்றத்தை ஒத்திவைத்துளளார்.
இது கோழைத்தனமானதும் நாட்டை கேலிக்கிடமாக்கியுள்ள செயலுமாகும். புதிய அரசமைப்புச் சட்டம் வேண்டுமா? என்று மக்களைக் கேட்பது, உங்களுக்கு சாப்பிட விருப்பமா? என்று கேட்பது போன்றது.
சமஷ்டி அரசியலமைப்பு, ஒற்றையாட்சி, அரசியலமைப்பு, ஜனாதிபதி அரசியல் அமைப்பு, நிறைவேற்றுக்குழு அரசியலமைப்பு போன்ற ஏதேனுமொரு அரசியலமைபபை விரும்பும் எவரும் இக் கேள்விக்கு 'ஆம்' என்று வாக்களிப்பார். ஜனாதிபதி மில்லியன் கணக்கான பணத்தை வீணாக்குகிறார் என்று லங்கா தேசிய காங்கிரஸ் தலைவர் எஸ் எல் குணசேகரா குற்றம் சாட்டியுள்ளார். (உ)

## நலலைக்குருமணி நாளை வருகிறார்

(யாழ்பபாணம)
கடந்த மாதம 16 ஆம் திகதி கனடா நாட்டிற்கு ஆன்மீகப பயணம மேற்கொணட நலலை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த சுவாமிகள் நாளை மாலை 5.00 மணிக்கு யாழ்பபாணம் வருகை தரவுளளார்.
சுவாமிகளுக்கு ஆதீன சம்பிரதாயப்படி வரவேற்பு, பாத பூஜை ஆகிய உபசரணைகள இடம்பெறும். (உ)

### சந்தேக நபர்கள் விளக்க மறியலில்

(மந்திகை)
அல்வாய் கிழக்கு அத்தாய்ப் பகுதிக் கிணறறில் இருந்து குடும்பப் பெண ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் இருவர் கடந்த வெளளியன்று பருத்தித்துறை மாவட்ட நீதியன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப் பட்டனர்.
அதே இடத்தைச் சேர்ந்த மரணமான பெண்ணின் கணவரான கருணைப்பிரகாசம் தவராசா கருணைப்பிரகாசம் கண்ணன் ஆகியோரே ஆஜர் செய்யப்படடவர்களாவர்.
இருவரையும் எதிர்வரும் 27 ஆம திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் எஸ்.ஏ.ஈ.ஏகநாதன் உத்தரவிட்டார்; (உ-23)

## திவ்வியனை விடுவிக்கும் போராட்டம் வலுக்கிறது

(துன்னாலை)
யாழ்.பல்கலைக்கழகவெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களும் நேற்று முதல் பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.
யாழ்.பல்கலைக்கழகமாணவன் கி.திவ்வியனின்விடுதலை கோரியும் தமிழ்ப் பெண்கள் மீது தொடரும் பாலியல் வல்லுறவைக்கண்டித்தும்தேவையற்ற விதத்தில் இளைஞர், யுவதிகள் கைதாவதைஎதிர்த்தும் மேற்படி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (உ-41)

## பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)
யாழ் பலகலைக்கழகமாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் மீது சுமததப்பட்ட குற்றச்சாட்டை நீக்க, சட்டமா அதிபர்மூலம் நடவடிக்கைஎடுத்து உடனடியாக அவரை விடுதலை செய்து கல்வியைத் தொடர ஆவனசெய்ய வேண்டும் என யாழ் பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்ககுமாரதுங்கவைக் கோரியுள்ளது.
தற்போதைய நிலவரம் தொடர்பாக மேற்படி ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைததுள்ள அவசர கடிதத்தில்,
காலவரையறையின்றிமூடப்பட்டுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை உடனடியாகத் திறந்து மாணவர்களின் கல்வியைத்தொடர வழிவகை செய்ய வேண்டும்.
பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட அப்பாவித் தமிழ்ப் பெண்கள்விடயத்தில் சம்பந்தப்பட்ட நபர்களைச் சட்டத்தின் முன் நிறுத்திஎதிர்காலத்தில்இவ்வாறானசெயல்கள் நடை பெறாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
எவ்வித காரணங்களுமின்றி அநாவசியமான முறையில் இளைஞர்கள், யுவதிகளை கைது செய்வதும், அதனால் அவர்களுடையஉடல்,உளரீதியான பாதிப்பு நிகழ்வதையும் உடனடியாக நிறுத்தவேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன, (உ)

## திவ்வியன் கைது கடற்றொழிலாளர் சங்க சமாசம் கண்டனம்

[யாழ்ப்பாணம்]
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் கி. திவ்வியன் கைதைக் கண்டித்தும், பல்கலைக்கழகம்காலவரையின்றி மூடப்பட்டிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம்அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
அவ்வறிக்கையில், யாழ். பல்கலைக்கழக உபவேந்தரின் ஆலோசனையின்றி யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்ட செயலானது யாழ். மாணவரின் கல்வியை மழுங்கடிக்கச் செய்யும் சதியா? இந்நடவடிக்கையை நாம் கண்டிக்கின்றோம். தொடர்ந்தும் அப்பாவிகளைக் கைது செய்து இவ்வகையாகத்தண்டிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.
சட்டப்படி கைது செய்யப் பட்டவர் இரு வாரத்திற்குள் நீதி மன்றில் ஆஜர் செய்யப் பட வேண்டும,
தவறும் பட்சத்தில் எமது கடற்றொழில் சமூகம் ஒன்றுபட்டு நேரடியான எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கான முயற்சிகள் மேற் கொள்ளும் என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. [உ]

## அழைப்பாணையை உதாசீனம் செய்தவருக்கு வழங்கப்பட்ட பிணைரத்து

(மந்திகை)
நீதிமன்றின அழைப்பாணையை உதாசீனம செய்தவரை, விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரிநீதிமன்ற நீதவான் உத்தர விட்டுள்ளார்
மிருசுவில் பகுதியில் வீட்டின் மூலைஓட்டைத் திருடினார் என்றகுற்றச் சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப் பட்ட மேற்படி நபர், குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் பிணையில் செல்ல நீதவான் அனுமதி வழங்கினார்.
பின்னர் அடுத்தடுத்தவழக்குத் தவணைகளுக்கு சமுகமளிக்க தவறியமையாலும் நீதிமன்றத்தின் உத்தரவை மதிக்கத் தவறியதாலும் அவருக்கு வழங்கப் பட்ட பிணையினைஇரத்துச்செய்து எதிர் வரும் 26 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். [உ-23]

★இன்று கோண்டாவில் கேணியடி காளியம்பாள் கோவில் கொடியேற்றம்,

### அருள்தா கேணியடி காளியே

எம் மண்ணின் துயர் நீக்க வருவாயே
ஏற்றமுடன் நல் வாழ்வு தருவாயே
இம்மைப் பிறப்பில் எங்கள் வினையறுப்பாயே
செம்மணச் செல்வனின் மகமாரியே
ஐம் பொன்னாலான கொடி ஏறுவாயே
போற்றிசைக்கும் அடியவர் அருள் புரிவாயே
அம்மையே இதம் தரு கேணியடி காளியே
அம்பிகையே கோண்டாவில் பதி நாயகியே
தும்பிக்கையான் துணை வேண்டியே
நம்பியே உனை நாடும் எமைக் காப்பாயே

கோண்டாவிலூர்,
இ. டினேஸ்சன்

## செய்தித் துளிகள்

### மாணவனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்ற மாணவன் ஒருவன் இன்னமும் வீடு திரும்பவில்லை என உறவினர்களினால் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ் செங்குந்தா இந்துக் கல்லூரி மாணவனான நல்லூர் இராசவீதியைச் சேர்ந்த வீ. ஜெயனாந்தன் (வயது14) என்பவரையே காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

### விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக்கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் நாவலர் பாலர் சோலையின் 9 வது வருடாந்த விளையாட்டு விழா இன்று பி. ப. 1. 30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

செல்வி பா. ஜெயந்தினி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (செ)

### பிரதேச செயலர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் கைதடி ப.நோ. கூ. சங்க நிர்வாக எல்லைக்குள் வசித்து, தற்போது இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நிவாரணம் பெற்று வரும் குடும்பங்களை ஆடி மாத நிவாரணம் தொடர்பாக, தற்போது தங்கியிருக்கும் பகுதி கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கோப்பாய்ப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ)

### மாணவர்கள் சாதனை

(புலோலி)

கல்வித்திணைக்களத்தால் வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்கள் சாதனைகளை நிலை நாட்டியுள்ளனர்.

19 வயதிற்குட்பட்ட பிரிவில்:- எம். சிவாஜி 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தையும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

21 வயதிற்குட்பட்ட பிரிவில்:- முப்பாய்ச்சல் போட்டியில் என். பிரதீபன் இரண்டாம் இடத்தையும், 400 மீற்றர் தடை ஓட்டப் போட்டியில் ஜெ பிரதீபன் 2ம் இடத்தையும் பெற்றுள்ளனர். (உ-52)

### வினைத்திறன் காண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை நீதிமன்றத்திற்கான சுருக்கெழுத்தாளர் சேவை தரம் 2 அலுவலர்கள் வினைத்திறன் காண் தடைப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். கல்வி வலய அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபாலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

### நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக்கல்லூரி ஆசிரியர் சின்னத்தம்பி பத்மராஜாவின் 'இந்தியத் தத்துவச்சுருக்கம் நூல்வெளியீட்டு விழா இன்று பி ப 3. 30 மணிக்கு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி. சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

### ஜூன் மாத நிவாரணம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம் இடம் பெயர்ந்த மக்களுக்கு ஜூன் மாதத்திற்கான நிவாரணத்தினை 92ஏபி இலக்கத்திற்கு வழங்கி வருகின்றது. (உ-120)

### குண்டர்கள் குண்டு வீச்சு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு இடமளிக்க வேண்டாம் என்று ஜனாதிபதிக்கு மகஜர் கையளித்த பத்து பொ. ஐ.மு. பின்வரிசை எம். பிக்களில் ஒருவரான ஆனந்த முனசிங்கவின் வீட்டை குண்டர்கள் கற்களாலும், குண்டுகளாலும் வீசி சேதப்படுத்தியுள்ளனர்.

எனினும் வீட்டிலிருந்த எவருக்கும் எந்தவிதக் காயமும் ஏற்படவில்லை. (உ)

### தீர்த்தத் திருவிழா

(புலோலி)

வடமராட்சி கிழக்கு அம்பன் அருள் மிகு வரசித்தி விநாயகராலய தீர்த்தத் திருவிழா ஆடி அமாவாசைத் தினத்தன்று தான்தோன்றித் தடாகத்தில் நடைபெறவுள்ளது. (உ-52)

### விளையாட்டு போட்டி

(வடடுக்கோட்டை)

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நாளை பி ப 2 00 மணிக்கு அதிபர் திருமதி கோ அம்பலவாணர் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம் பிள்ளையும், வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-24)

### பாதீனியம் அழிப்பு

(புலோலி)

வல்வைப் பகுதியில் பரவி வரும் பாதீனியம் செடிகளை அழிக்கும் நடவடிக்கையில் விவசாயத்திணைக்களத்தின் அனுசரணையுடன் கரவெட்டி கலைநேசன் சனசமூகநிலையம் ஈடுபட்டுள்ளது.

பாதீனியம் அழிக்கப்பட்ட பகுதிகளை கரவெட்டி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன், புலோலி விவசாயப் போதனாசிரியர் எஸ் பாலசுப்பிரமணியம் ஆகியோர் நேரில்சென்று பார்வையிட்டதாக சனசமூகநிலையச் செயலாளர் எம். அருள்நேசன் தெரிவித்தார். (உ-52)

## வடக்கு-கிழக்கில் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றும் நோக்கில் விபரங்கள் திரட்டப்படுகின்றன

(மானிப்பாய்)

பூகோள ரீதியாகப் பாதிக்கப்படும், அபிவிருத்தித் திட்டங்கள் ஏதும் முன்னெடுக்கப்படாதுமிகவும் பின்தங்கியிருக்கும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் பின் தங்கிய கிராமம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு,

கிராமத்திலுள்ள குடும்ப எண்ணிக்கை, தேவைப்படும் குடிநீர்க்கிணறுகள், மலசலகூடங்கள், சிறுவர்பாடசாலைகள், திருத்த வேண்டியபாதைகள், பொதுக்கட்டடங்கள், பாடசாலை செல்லும் பிள்ளைகள், பாடசாலை செல்லாத பிள்ளைகள், தொழில் செய்வோர், விதவைகள் விபரம் ஆகியவற்றைத் திரட்டி அனுப்பி வைக்குமாறு வடக்கு கிழக்கு மாகாண அபிவிருத்தித்திணைக்களம் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-120)

## இராசி பலன்

15-07-2001

(ஆனி 31 ஞாயிறு)

நவமி மு.ப 9 39 வரை

பரணி பி.இ 4 08 வரை

ராகுகாலம் 4 30-6 00

நல்லநேரம் 9.00- 10 30

**மேடம்**
மதிக்கப்படுதல், ஆழ்ந்த சிந்தை. காரியநன்மை, நல்ல உணவு கிடைத்தல்.

**இடபம்**
பிரயாணம், பிதா சிந்தை, சோபமடைதல், முயற்சிதாமதம்.

**மிதுனம்**
நினைத்த காரியம் கைகூடும், தெய்வ சிந்தை, குடும்ப சுகம், தனலாபம்,

**கடகம்**
விருந்துபசாரம், தொழில் வெற்றி, கீழ்ப்படிவு முயற்சி நன்மை.

**சிங்கம்**
வயிற்றுக்கோளாறு, உடல் உழைப்பு, கட்டுப்பாடு, எதிர்பாராத நன்மை.

**கன்னி**
பிரயாணபயம், வீண் தொல்லை, காரியத்தடங்கல், உடல் சோர்வு.

**துலாம்**
செல்வாக்கு, நண்பர்களால் உதவி, அபூர்வ சந்திப்பு. முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி, பெரியோர் மனஸ்தாபம், காரியம் கைகூடும், ஆரோக்கியம்.

**தனுசு**
குடும்பக் கவலை, வியாதி, முயற்சிதாமதம், தொழில் மந்தம்.

**மகரம்**
மனச்சோர்வு, உறவினர் மனஸ்தாபம், காரியம் கைகூடும, கீர்த்தி.

**கும்பம்**
வாகனமேன்மை, சகோதரர்உதவி. முயற்சிவெற்றி, அந்நியர்சந்திப்பு.

**மீனம்**
வாக்குக் கலகம், காரியதாமதம், தனவிரயம், கௌரவக் குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மாணவரும் வகுப்பு புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டு, விரிவுரைகள் சுமுகமாக இடம் பெறும் வரை தமது விரிவுரைகளை நேற்று முன்தினம்முதல் பகிஷ்கரித்து வருவதாக லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ மாணவர்மன்றம் அறிவித்துள்ளது;

இது தொடர்பாக அம்மன்றம் விடுத்த அறிக்கையில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவனும் முன்னாள் மாணவர் மன்றச் செயலாளருமாகிய கிருஷ்ணசாமி திவ்வியன் கைது தொடர்பாகவும், தொடர்ந்து பல்கலைக்கழக மாணவர்களது ஜனநாயக செயற்பாடுகளால் பல்கலைக்கழகம் மூடப்பட்டுள்ளமையும் அறிந்து மிக்க வேதனையடைகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது, (உ)

## வடமராட்சி வலயக்கல்வி பணிமனைக்கு கட்டட வசதி

(புலோலி)

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதற்கான காணி கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை மேற்கொண்டு வருகிறது.

தற்போது வடமராட்சி வலயக்கல்விப் பணிமனை புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையுடன் இணைந்த பகுதியில் இயங்கி வருகின்றது (உ-52)

## பிரதமரை பதவி விலக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை

### ஜனாதிபதிக்கு கூட்டாக கடிதம்

(கொழும்பு)

பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா மீது பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். இதனால் அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் ஜனாதிபதியைக் கோரியுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமரதுங்காவுக்கு கூட்டு எதிர்கட்சிகளின் தலைவர்கள் கையெழுத்திட்டு பிரதமரை பதவி விலக்கக் கோரி கடிதமொன்றை அனுப்பியுள்ளனர் அக் கடிதத்தில பாராளுமன்றில் பெரும்பான்மையான 115 பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். இந்நிலையில அவரைப் பதவி நீக்கம செய்து புதிய ஒருவரை பிரதமராக நியமிக்கவேண்டுமென ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, எதிர்க்கட்சிகளின கூட்டுக்குழுவின் பாய்ச்சல் நிறைவேற்று அதிகாரமற்ற பிரதமரின் மீது இப்போது விழுந்துள்ளது; இந்நிலையில் பிரதமரின் பதவி தப்பிப்பிழைக்குமா என அரசியல் விமர்சகர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர், (இ)

## சிங்கள வியாபாரிகள் மூவர் வெட்டிக்கொலை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு கல்முனை வீதி கிரான்குளப் பகுதியில் அண்மையில சிங்கள வியாபாரிகள் மூவர் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

செங்கல் வியாபாரம் செய்யும் மேற்படி வியாபாரிகளை லொறியுடன் சேர்த்துக் கடத்திச் சென்ற இனந்தெரியாதோர் குழு மூவரையும் கடற்கரையோரத்தில் வைத்து வெட்டி படுகொலை செய்ததுடன் லொறியையும் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர். [இ]

## மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு பொறுப்பதிகாரி நியமனம்

மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையின பொறுப்பதிகாரியாக டாக்டர் பொ. பேரானந்தம் இம் மாதம் 4 ஆம் திகதி முதல் மீள நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட காலமாக மேற்படி வைத்தியசாலையில் பணியாற்றி வந்த டாக்டர் ரி. அருளம்பலம் அண்மையில் காலமானதைத் தொடர்ந்து நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் அண்மையில் மகஜரொன்றைக் கையளித்தமை குறிப்பிடத்தக்கது. (உ-120)

## இன்று ஒரு தகவல்

# இறைவனுக்கு நெருக்கம்

துறவி ஒருவர் சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார் அங்கு மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. தட்டுத் தடுமாறி அங்குவந்த குருட்டுப்பெண் ஒருத்திதுறவியிடம் நெருங்கினாள். அவரைப் பார்த்து 'துறவியாரே! பார்வையற்றவளாகிய என்னால் இறைவன் மகிழும் வண்ணம் வாழ்க்கை நடத்தமுடியுமா?' என்று கேட்டாள்.

தன்குரலில் அன்பொழுக 'பெண்ணே! உன்னை ஒரு கேள்விகேட்கிறேன் அதற்குப் பதில்செல். நடிப்புப் போட்டி ஒன்று நடக்கிறது அதில் ஒருவன் அரசன் வேடம் போட்டு வருகிறான், இன்னொருவன் பிச்சைக்காரன் வேடமிட்டு வருகிறான். வேறொருவன் நொண்டி போல் வருகிறான், மற்றொருவன் பைத்தியக்காரன்போல வேடமிட்டு வருகிறான், இப்படியே பலவேடங்களில் பலர் வருகின்றனர். யாருக்குப் பரிசு கிடைக்கும்? அரசன் வேடம் போட்டவனுக்கா? அல்லது பிச்சைக்காரனுக்கா? அல்லது வேறு யாருக்கு?' என்று கேட்டார் துறவி.

அதற்கு அந்தப் பெண் 'யார் தான் ஏற்றிருக்கின்ற வேடத்தில் மிகச் சிறப்பாக நடிக்கின்றனரோ அவருக்கே பரிசு கிடைக்கும்' என்று பதில் தந்தாள். 'நன்றாகச் சொன்னாய்' என்றார் துறவி 'அதேபோலத்தான் இந்த உலக வாழ்க்கையிலும் பலருக்குப் பல வேடமும் தரப்பட்டுள்ளது. எனக்குத் துறவிவேடமும் உனக்குப் பார்வையற்றவள் வேடமும் கிடைத்துள்ளன. யார் தமக்குக் கிடைத்த வாழ்க்கையைச் சிறப்பாக நடத்துகின்றனரோ அவரே இறைவனுக்கு விருப்பமானவர் ஆவார்' என்றார், இதைக்கேட்ட அந்தப் பெண்ணும் மகிழ்ச்சியுடன் விடைபெற்றாள். □

பேராசிரியர் எ. சோதி

# மாணவன்திவ்வியனின் செய்திகளை பத்திரிகைகள் திரிபுபடுத்துகின்றன

## படைத்தரப்பு சீற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் கிருஷ்ணசாமி திவ்வியன் கைது செய்யப்பட்டதை அடுத்து, படையினர் தெரிவித்த செய்தியைத் திரிபுபடுத்தி, மாணவ சமுதாயத்தை தவறான பாதையில் வழிநடத்தும் வகையில் பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டுள்ளதாக, நேற்று முன்தினம் யாழ் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அனுப்பியசெய்திக் குறிப்பு, பத்திரிகைகளைச் சாடியுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மாணவன் திவ்வியன் படையினரால் கைது செய்யப்படும் போது ஆயுதம் வைத்திருந்தார். தனது குற்றத்தைப் பல்கலைக்கழக சமூகம் மற்றும் தனது தாயார் முன்னிலையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

மாணவனின் குற்றச் செயல்களையும் சாட்சிகளின் வாக்குமூலங்களையும் பதிவு செய்த பின்பு அவரை நீதிமன்றில் ஆஜர் செய்ய யாழ் பிரதிப்பொலிஸ்அத்தியட்சகர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குற்றச் செயல்கள் புரிந்த நபரை விடுதலை செய்யும் அதிகாரம் படையினருக்கு இல்லை. அது நீதிமன்ற விசாரணைகளின் பின்பு முடிவு செய்யப்படும்.

யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டாலும் கல்வி சீர்குலைந்தாலும் அதற்கு அரசே பொறுப்பென சில நபர்களும் இயக்கங்களும் பிரசாரம் செய்கின்றன. இதனால் யாழ் மக்கள் ஏமாற்றமடைய வேண்டாம்.

யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்டதற்கும் படையினருக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லையென்று அச்செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

திவ்வியனை விடுதலை செய்யக்கோரி

# வவு. வளாக ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

(வவுனியா)

யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுவிக்கவும், மூடப்பட்ட யாழ் பல்கலைக்கழகத்தைத்திறக்கவும் கோரிய யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக கல்விசாரா ஊழியர்கள் நேற்று முன்தினம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை அடுத்து வவுனியா வளாக அனைத்து நிர்வாகசெயற்பாடுகளும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்ததாக யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாகத் தலைவர் கலாநிதி எஸ். மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (ம)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

[வவுனியா]

கடந்த 4ஆம திகதி அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில ஆரணுவத்தினருடன ஏறபட்ட எதிர்பாராத மோதலில்.

★ கபடன முகிலதாசன் [முருகையா சிவராஜ் அம்பாறை]

★ மேஜர் பிரியநிதன், தியாகராஜா சந்திரராஜ். அம்பாறை]

★ லெபடினன் இனியவன் தர்மாசுரேஷ் அமபாறை] ஆகிய புலிப போராளிகள உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு பகுதியில இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில

★ கபடன் சுடர் மணி [ஜே. சப் எட்வேட் அலெக்ஸ் பிரதீபன் முல்லைத் தீவு]

★ லெப்டினன் நந்தினி [பொன்னையா புனித மலர் மட்டக்களப்பு]

★ லெப்டினன் செல்வி [தியாகராஜா வனிதா மட்டக்களப்பு] ஆகிய போராளிகளும கடந்த வியாழககிழமை வெடிவைததகல் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில

★ வீரவேங்கை மதுஷன் [பாசாராசகுமார் யாழ்ப்பாணம்]

★ வீரவேங்கை கயில்காவலன் [கபிரிஜ்ஜறபிள்ளை நிக்ஷன் மன்னார்] ஆகியபோராளிகளும உயிரிழந்துளளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துளளனர். [ந-5]

# அரசாங்கத்தின் முடிவுக்கு அஸ்கிரிய பீடாதிபதி அதிருப்தி

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைப்பதற்கும், கருத்துக்கணிப்பை நடத்துவதறகும அரசாங்கம் எடுத்துள்ள முடிவை ஏற்றுக் கொளள முடியாது என்று அஸ்கிரிய பீடாதிபதி வண புத்தரகித்த தேரர் அண்மையில் தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்ட ஐ.தே.க எம்.பி ரம்புக்வெல, ஸ்ரீ புத்தரகித்த மகாநாயக்கா தேரரை சந்தித்த போதே தேரர் மேற்படி கருத்தைக் கூறியிருந்தார்.

எந்தக்கட்சி ஆட்சியிலிருந்தாலும, பிரச்சினைகளை உரையாடல்கள் மூலம் தீர்த்துக் கொள்ளுதல் வேணடும யன்றி, சூழ்நிலைகளுக்கு முகம் கொடுக்காமல தவிர்த்து நடவடிக்கைகள எடுப்பதை ஏற்றுககொளள முடியாது.

இது பற்றிமகிழ்ச்சியடைவதற்குமில்லை, பிரச்சினைகள் தோன்றும்போது பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது ஜனநாயக முறையாகாது என்று மேலும்தேரர் தெரிவித்துள்ளார். (உ)

# குண்டுகள் செயலிழப்பு

(கொழும்பு)

தனங்கிளப்புப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் ஆர். பி. ஜி குண்டு ஒன்று, மற்றும 16, மி மீ மோட்டார் குண்டு, 9 கைக்குண்டுகள் என்பவற்றை மீட்டெடுத்து செயலிழக்கச் செய்துள்ளனர். (உ)

# கார்த்திகை உற்சவம்

(ஏழாலை)

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை ஆடித்திருக்கார்த்திகையை முன்னிட்டு விஷேட பூஜைகளும் ஷண்முகார்ச்சனையும் நடைபெறவுள்ளது.

''கார்த்திகைக் குமரன்'' என்னும் தலைப்பில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புரை நிகழ்த்தவுள்ளார். (செ-12)

# வருடாந்த மஹோற்சவம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம்-திருவண்ணை நகர் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தின், மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம் மாதம், 23-ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 24-ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தீர்த்தத் திருவிழாவும், 25-ஆம் திகதி புதன் கிழமை திருவூஞ்சல் விழாவும் நடைபெறவுள்ளன. (செ-103)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்றுகொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று, எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் 24ஆம்திகதிசெவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ-75)

★ ★ ★

(புலோலி)

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய அம்மன் வருடாந்த மஹோற்சவம் நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ-52)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு கேணியடி காளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ)

# வீரமக்கள் தினத்தில் இரத்ததான நிகழ்வு

[யாழ்ப்பாணம்]

வீரமக்கள் தினத்தின் முதல் நாளான நேற்று முன்தினம் தமிழீழ மக்கள்விடுதலைக் கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இரத்த தானம்செய்தனர்.

முன்னதாக மு.ப 10 மணிக்கு தந்தை செல்வா நினைவுத்தூபி அமைந்துள்ள பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் அ. அமிர்தலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரன் ஆகியோர் நினைவாக மலர் அஞ்சலிகள் இடம்பெற்றன.

சாவகச்சேரி பிரதேச சபைத்தலைவர் அன்ரன் பொன்னையா, சாவகச்சேரி நகரசபைத் தலைவர் பொ. தனபாலசிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேசசபைத் தலைவர் வே. நவரட்ணம், பருத்தித்துறை நகரசபை உபதலைவர் ந. மணிவண்ணன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். [உ-6]

# மானிப்பாய் லயன்ஸ்கழக 19 வது பதவியேற்பு வைபவம் இன்று

[மானிப்பாய்]

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத்தின் 19 வது பதவியேற்பு வைபவம் இன்று காலை புதிதாக தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவிருக்கும் யாழ் வர்த்தக வங்கி முகாமையாளர் லயன். எஸ். ரவீந்திரனின் இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்திய இணைப்பாளர் லயன். சி. பத்மநாதனும் கௌரவ விருந்தினராக லயன் செ. ஞானராசாவும் கலந்து கொளளவுள்ளனர். (உ-120)

# அல்லாரைபாலியல்சம்பவம்: அடையாள அணிவகுப்பிற்கு நீதவான் உத்தரவு

(மந்திகை)

மீசாலை அல்லாரைப்பகுதியில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள மூன்று இராணுவத்தினரும் சாவகச்சேரிநீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிறேம்சங்கர் முன்னிலையில் கொடிகாமம் பொலிஸாரினால் சந்தேகநபர்கள் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களான லான்ஸ் கோப்ரல் குணராஜகேவீர சிறி (வயது25), கு.ஜெ.குணவர்த்தனா (வயது30), வி. காமினிஜெயவீரா (வயது28) ஆகிய மூவரையும் எதிர்வரும் 25ந் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் அன்றையதினம் சந்தேகநபர்கள் மூவரையும் உத்தியோகப்பற்றற்ற நீதவான் சு. கந்தசாமி முன்னிலையில் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறும் பொலிஸாருக்குப் பணித்துள்ளார். (ந-5,23,52)

# கள்ளத்தனமாய் கசிப்பு அருந்திய பெண் மரணம்

(மன்னார்)

மன்னார் முருங்கன் பகுதியில் சட்ட விரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து அருந்திய ஆறுபேரில் இருவர் உயிரிழந்துளளனர்.

கசிப்பு உற்பத்தி செய்து அருந்திய 6 பேரும் மயக்கமடைந்த நிலையில் முருங்கன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு இருவர் மரணமடைந்துள்ளனர்.

உயிரிழந்த இருவரில் ஒருவர் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

## உலக தரிசன
## அறிவுப் போட்டி இல: 12

1. சர்வதேச மன்னிப்புச் சபைக்கு வயது என்ன?
2. இந்தியாவின் எந்தப் பிரதேசத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றால் பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கத் தீர்மானம்?
3. நேபாள மன்னர் குடும்பப் படுகொலையில் எத்தனை பேர் கொல்லப்பட்டனர்?
4. உத்தரப் பிரதேச கங்கைநதிப் படகு கவிழ்ப்பில் எத்தனை பேர் இறந்தனர்?
5. ஜெயலலிதாவை முதலமைச்சராக நியமித்த ஆளுநர் யார்?
6. வீரப்பனின் சகபாடிகளில் யாரைப் பிடிக்க உதவுபவர்களுக்கு 15 இலட்சம் ரூபா தருவதாக ஜெயலலிதா கூறினார்?
7. அண்மையில் நடந்த பிரித்தானியத் தேர்தலில் எத்தனை வீதத்தினர் வாக்களித்துள்ளனர்?
8. ஈரானின் ஜனாதிபதி யார்?
9. முதல்வர் ஜெயலலிதா தனது அமைச்சரவையிலிருந்து முதலில் விலக்கிய மூன்று அமைச்சர்கள் யாவர்?
10. கொன்சவேட்டிக் கட்சியின் தலைவர் ஏன் பதவி விலகினார்?
11. சவுதி அரேபியா எந்த நாட்டிலிருந்து கோழி இறக்குமதிக்கு தடை விதித்தது?
12. பிரித்தானியாவின் வெளியுறவு அமைச்சர் யார்?
13. எந்த நாட்டு ஜனாதிபதிக்கு குதிரை அன்பளிப்பாக வழங்கப்பட்டது?
14. பங்களாதேஷில் ஆளும் கட்சிக் கட்டடத்தில் குண்டு வெடித்ததில் எத்தனைபேர் பலியாகினர்.
15. சதாம் ஹுசைன் எந்த நாட்டு அதிபர்?
16. தாய்லாந்தின் தலைநகர் எது?
17. சர்வதேச எயிட்ஸ் மகாநாடு அண்மையில் எங்கு நடைபெற்றது?
18. அவுஸ்திரேலிய தேசிய கீதம் ரசனை இல்லாதது என்று கூறியவர் யார்?
19. தமிழகத்தில் பிடிபட்ட விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் யார்?
20. கோழிக்கோடு ரயில் விபத்தில் இறந்தோர் தொகை எவ்வளவு?
21. ஒரே தினத்தில் நான்கு கோள்களை விண்ணுக்கு அனுப்ப இருக்கும் நாடு எது?
22. உலக வங்கிக்கு சீனா எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?
23. த ஜ்மஹ லைப் பராமரிக்க எந்தஸ்தாபனம் முன் வந்துள்ளது?
24. பாகிஸ்தான் ஆயுதப் போட்டியில் இறங்காது என்று கூறியவர் யார்?
25. போதைப் பொருள் கடத்தலுக்காக எந்த நாட்டில் 1000 பேர் சுடப்பட்டனர்?

## போட்டி விதிமுறைகள்

1) வயது வேறுபாடின்றி எவரும் பங்கு பற்றலாம் (வலம்புரிக் குடும்பத்தினரைத் தவிர)
2) வினாக்கள் யாவும் ஜூன் மாத 'வலம்புரி'யின் உலக தரிசனத்தைச் சார்ந்ததாக அமையும்.
3) போட்டியாளர் தனது பெயர், விலாசம், பிறந்த திகதி என்பவற்றைக் குறித்த படிவத்தில் எழுதி அதனை விடைத்தாளுடன் இணைத்து 'வலம்புரி' இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு அனுப்ப வைக்க வேண்டும்.
4) போட்டியில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மூவருக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் அது பற்றிய விபரம் 'வலம்புரி'யில் வெளியிடப்படும்.
5) விடைகள் யாவும் 30 07 2001 இற்கு முன் வந்து சேரக் கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.
6) வினா இலக்கங்களை குறித்து விடையை எழுதினால் மட்டும் போதுமானது. (வினாத் தாளை இணைக்க வேண்டாம்.)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல -12

முழுப்பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

பிறந்த திகதி: ____________________

போட்டியாளர் கையொப்பம்: ____________________

பெற்ற புள்ளிகள்: __________

## நேபாளத்தில் மாவோ கிளர்ச்சியாளர்
# காவல் நிலையம் மீது தாக்குதல்

(காட்மண்டு)

நேபாளத்தில் மாவோ கிளர்ச்சியாளர் காவல் நிலையம் ஒன்றைத் தாக்கி எழுபது பொலிஸாரைக் கைது செய்துள்ளனர்

நேபாள வடமேற்கு கரையிலுள்ளநகரக்காவல் நிலையமே தாக்குதலுக்கு உள்ளாகியதென்றும் கைது செய்யப்பட்ட 70 பேரில் ஒருவர் இறந்து விட்டார் எனவும் நேபாள உள்துறை அமைச்சகச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் முழு கதவடைப்புக்கு ஏற்பாடு செய்த மாவோ கிளர்ச்சியாளர்கள் முன்னோடியாக அதிகாலை இந்தக் காவல் நிலையத்தாக்குதலில் ஈடுபட்டனர்.

அதிகாலை காவல் நிலையம் தாக்கப்பட்டது தொடக்கம் காலை 9.00 மணி வரை இருபகுதியினருக்கு மிடையில் மோதல் இடம் பெற்று இறுதியில் ஆயுதங்களை கிளர்ச்சியாளர்களிடம் ஒப்படைத்துவிட்டு பொலிஸார்சரணடைந்ததாகச் செய்திகள்தெரிவிக்கின்றன. (து)

## மாவோ கிளர்ச்சியாளர் ஹெலியைசுட்டுவீழ்த்தினர்

(காட்மண்டு)

நேபாளத்தில் மாவோ கிளர்ச்சியாளர்கள் இராணுவ ஹெலிக்கொப்டர் ஒன்றைச் சுட்டு வீழ்த்தியுள்ளனர்

நேற்று முன்தினம் மாவோ கிளர்ச்சியாளர்களும் அரச படையினரும் பல மணி நேரம் மோதல்களில் ஈடுபட்டமை தெரிந்ததே

ஹெலி சுட்டுவீழ்த்தப்பட்டதனால் மூன்று இராணுவ அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

நேபாளத்தில் இராணுவக் கிளர்ச்சியாளர்களுடன் மோதுவது இதுதான் முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-து)

## 6 ஈழத் தமிழர்கள் தமிழகம் சென்றனர்

(சென்னை)

இலங்கைத்தமிழ் அகதிகள் ஆறுபேர் அண்மையில் தமிழகம் சென்றடைந்தனர்;

அந்த 6 பேரும் மன்னார் பேசாலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ளனர்;

இதேவேளை கடந்த வாரமும் 17 ஈழ அகதிகள் தமிழகம் சென்றடைந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-8)

## குடியேற்றவாசிகள் கைது

(லண்டன்)

சட்டவிரோத குடியேற்றவாசிகள் என்று கருதப்படும் சிலரை மொரோக்கோ பொலிஸார் கைது செய்துள்ளனர்

ஸ்பெயின் நாட்டுக்குள் பிரவேசிக்கும் நோக்கில் கிப்ரேய்டர் நீரிணையைக் கடக்க முற்பட்ட போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஐரோப்பிய கடல் எல்லையிலிருந்து 0 கிலோ மீற்றர் தொலைவிற்கு அப்பால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று மொரோக்கோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. (உ-7)

## ஒரே சூலில் 7 குழந்தைகள் தமிழ்ப் பெண் பிரசவிப்பு
### அமெரிக்காவில் சம்பவம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் வாஷிங்டன் மருத்துவ மனையில் தமிழ் பெண் ஒருவருக்கு 7குழந்தைகள் பிறந்துள்ளன

மூன்று நிமிட இடைவெளிகளுக்குள் பிறந்த இந்த 7 குழந்தைகளும் ஒவ்வொன்றும் ஒரு கிலோகிராம் எடை கொண்டதாகக் காணப்படுவதால் ஆரோக்கியம் குன்றிக் காணப்படுவதாக அமெரிக்காவில் பணியாற்றும் இந்திய வைத்தியர் சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயார் கோமா நிலையில் இருப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை, குழந்தைகளின் பெற்றோரின் பெயர்களை வெளியிட வேண்டாமென சம்பந்தப்பட்டவர்கள் கேட்டிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-07)

## மோதல் வெடிப்பு

(ஜெருசலேம்)

இஸ்ரேலியர்களுக்கும்பலஸ்தீனர்களுக்கும் இடையே கடந்த வியாழக்கிழமை மீண்டும் மோதல் வெடித்துள்ளது.

திடீரென இடம்பெற்றஇத் துப்பாக்கிச் சமரில்உயிரிழப்புக்கள் ஏதும் ஏற்படவில்லை. (உ-7)

## சுமத்திராவில் புகை அண்டை நாடுகள் அதிருப்தி

(சிங்கப்பூர்)

சுமத்திராவின் புகை மூட்டங்கள் சிங்கப்பூரை மாசுபடுத்துவதாக சிங்கப்பூர் தெரிவித்துள்ளது:

சிங்கப்பூர் குடியரசு சுற்றுச்சூழல் அமைச்சர் சுமத்திராவின் கழிவுப் பொருள் எரிப்பு புகைகளும் காட்டுப் பெருந்தீயும் சிங்கப்பூரை மாசுபடுத்துவதாக சுமத்திரா அரசின் மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேவேளை மலேசியா புறூனோ போன்ற நாடுகளையும் இந்தப் புகை மூட்டங்கள் மாசுபடுத்துவதாகவும் அந்தநாட்டு அதிகாரிகள் சுமத்திரா மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனையடுத்து சிங்கப்பூர், மலேசிய போன்ற நாடுகளின் பிரதிநிதிகள் ஜகார்த்தா சென்று இதுகுறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தவுள்ளனர். [து]

## வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

### ★ முதன்முதலாக ஒரு மோட்டர் இருதயம்

மோட்டார் மூலம் சக்திபெற்று இயங்கும் செயற்கை இருதயம் ஒன்று முதன்முதலாக அமெரிக்க கென்ருகே மாநிலத்தில் உள்ள ஒருவருக்குப் பொருத்தப்பட்டு அந்நோயாளி தற்போது தேகாரோக்கியத்துடன் இருப்பதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஜூலை 3 ஆம் திகதி அன்று நடைபெற்ற 7 மணித்தியால சத்திரசிகிச்சையில் இச்செயற்கை மாற்று இருதயம் பொருத்தப்பட்டுள்ளது. ரைற்ரானியம் மற்றும் பிளாஸ்ரிக்கிலான இந்த இருதயத்தின் உள்ளேயே மோட்டார் பொருத்தப்பட்டுளளது.

முன்னர் பொருத்தப்பட்ட செயற்கை இருதயங்களிற்கு குழாய்கள் வயர்கள் வழியாக வெளியில் இருந்தே சக்தி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இப்புதிய இருதயத்தை மெஷாஸ்சோ நகரைச்சேர்ந்த ஒரு நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.

### ★ மூளைத் தொப்பிகள்

இனிவரும் காலங்களில் கணனியில் பயன்படுத்தப்படும் விசைப்பலகை (Key Board) மற்றும் குறை இணைப்பு மென்பொருள் (Software) ஆகிய எல்லாவற்றையும்விட செயற்திறனில் மேம்பட்ட Brain cap எனப்படும் 'மூளைத் தொப்பிகள்' பாவனைக்கு வர உள்ளது. இதனால் என்னபயன் என்கிறீர்களா?

இத்தொப்பிகளை தலையில் அணிந்தால் மூளை சிந்திக்காமலே இத்தொப்பியில் உள்ள உபகரணங்கள் மனிதர்களை வழி நடத்துமாம். சோம்பலான மனிதர்களுக்கு சுகமான சேதி அல்லவா!

— அவதானி —

நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாம் மாந்தர்க்(கு) இனத்தியல்ப(து) ஆகும் அறிவு.

குறள்

# வலம்புரி

## தொடர்ந்தால் ஆபத்து!

யாழ். பல்கலைக் கழக மாணவன் திவ்வியனின் கைதையடுத்து மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் பாடசாலைகள் யாவும் செயலிழந்து போயுள்ளன. இரண்டாந்தவணைப் பரீட்சை - க.பொ.த.உயர்தரப் பரீட்சை ஆகியன நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில்மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

தொடர்ந்தும் இப் போராட்டம் நடந்து கொண்டிருக்குமானால் அநேக மாணவர்களை பட மாளிகைகளிலும், வீதிகளிலுமே காண நேரிடும். யுத்தம்தந்த பரிசாகஇன்று யாழ்ப்பாணத்து கலாசாரம் சீரழிந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினால் மாணவர்கள் கட்டுப்பாடு - ஒழுங்கு தவறிச் செல்லும் வாய்ப்புகளும் ஏற்படவே செய்யும். அதே வேளை யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனுக்கு ஏற்பட்ட கதி நமக்கு மட்டும் ஏற்படாதென்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு என்ற கேள்வி மாணவர்களிடையே ஏற்படுவதுப நியாயமுடையதே.

கல்விச் செயற்பாடுகளுக்கு இருக்கக் கூடிய அடிப்படைப் பாதுகாப்பு இல்லாத நிலையில், புத்தகங்களைக காவிச் சென்று வகுப்பறைகளில் குந்தியிருந்து மதிப்பீடு- கணிப்பீடு- பரீட்சை ஆகியவற்றிற்கு முகங்கொடுப்பதில் என்ன பயனுண்டு.நாளை நாம் வீதியில் செல்லும் போது கைது செய்யப்பட மாட்டோம் என்பதற்கு உத்தரவாதம் உண்டா எனஓர் மாணவன்எழுந்து கேட்பானாயின் அதற்கு யாரால் பதில் கூற முடியும்.

மாணவர்களின் கல்வி நிலைபாதிக்கப்படுமாயின் அதனால்முழுச் சமூகமுமே பாதிக்கப்படும். எனவே பாடசாலை மாணவர்களின் பகிஷ்கரிப்பு விடயத்தில் சகல தரப்பினரும் ஒன்று கூடி பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்.

அதேநேரம் பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் இல்லையேல்போராட்டங்கள் தொடரவே செய்யும்.

---

### பரம பிதாகாட்டிய பாதை

# ஆண்டவர் மீதும் அயலவர் மீதும் அன்பு கூர்வது நிலை வாழ்வை உரிமையாக்க நல்வழியாகும்



"நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்" "உன் முழு இருதயத்தோடும் முழு உள்ளத்தோடும்.முழு ஆற்றலோடும், முழு மனதோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூருவாயாக.உன் மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர்கள் மேலும் அன்பு கூர்வாயாக".

(லூக் 10:25-26)

**பிழைக்கும் வழி**

கடவுளை வணங்குவது இலகுவானது ஆனால் அடுத்திருக்கும் அயலவனை ஏற்றுக் கொள்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஆனால் அவ்வாறு ஏற்றுக் கொள்பவன் உண்மையில் உதாரண புருஷனே. அடுத்தவரைக் கெடுத்து அல்லது அடுத்தவருக்கு கொடுக்கவேண்டியதை மறைத்து தம்மைப் பெரியவர்களாகவும், நல்லவர்களாகவும் இனங்காட்டிக் கொள்ளவே பலரும் முனைகின்றார்கள். ஒளியின் மக்களைவிட இருளின் மக்கள் விவேக முள்ளவர்களாகச் செயற்படுகின்றார்கள். வீழ்ந்து கிடப்பவனை மிதித்து உழக்கி அவனிடமுள்ளவற்றைப் பிடுங்கிக் கொண்டு தமது தேவைகளை நிறைவேற்றுவது,இன்று பிழைக்கின்ற ஒரு வழியாக மாறுகின்றது. இது கண்டிக்கப்பட வேண்டும்.

**அன்பின் வெளிப்பாடு**

உண்மையிலே ஜெருசலேமிலிருந்து ஜெரிக்கோவுக்கு செல்லும் வழியில் கள்வர் கையில் ஒருவன் அகப்பட்டு, குற்றுயிராய் இருந்தவேளை, அவனைக் காப்பாற்றியவன் குருவோ,லேவியனோ அல்ல; வெறுத்து ஒதுக்கப்பட்ட சமாரியனே. குற்றுயிரான உயர்சாதிக்காரனைக் காப்பாற்றினான். இன்றும் நடைபெறுவது இதுதான். ஊருக்கு உபதேசஞ் செய்யும் பலர் இறங்கிவந்து தமது உபதேசத்தின் செயற்பாடுகளைக் காட்டுவார்களாக இருந்தால் உலகம் திருந்த இடமுண்டு. இல்லையேல் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் வாழ்வையே நாம் தொடர்ந்து கொண்டிருப்போம். 'சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் அமைதியை நிலை நாட்டவும் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர்வழி தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டார். (கொலோ 1:20) இதுவே இறைவன் செய்த அன்பின் வெளிப்பாட்டுச் செயல்.

**வழிகாட்ட தகுதி**

எம்முடைய சொற்கள், செயல்கள் பிறருக்கு அநீதி விளைவிக்காமல் எப்பொழுது நற்செயல்களாக மாறுகின்றதோ அப்போது தான் மற்றவர்களுக்கு வழிகாட்ட எமக்குத்தகுதியுண்டு. இல்லையேல் நாம் போலி இறைவாக்கினரும். போலி வழிகாட்டிகளாகவுமே இருக்கின்றோம். அதிகாரத்தின் ஆணிவேர்களாக மாறாமல், அனுதாபத்துடன் மற்றவர்கள் பிரச்சினைகளை அணுகுகின்றவர்களாக செயற்படும் போது,ஆயனின் குரலுக்குச் செவிமடுக்கின்ற மந்தைகள் பெருகவும் மந்தைகளின் செழிப்பைக் கண்டு ஆயன் மகிழவும் வழிபிறக்கும்.

"உலகமே என் தேசம்,மனிதர்கள் என் உடன் பிறப்புக்கள்,நன்மை செய்வதே என் சமயம்" என்று தாமஸ் சையு என்ற அறிஞர் கூறுகிறார். நேர்மையுடன் கூடிய எளிமையாக நாம் வாழும் பொழுது, ஒளிர்விக்க எரிகின்ற மெழுகுவர்த்திகளாக ஆகமுடியும். தன்னை மற்றவர்களுக்குக் கொடுக்கப் பின்நிற்கின்றவன் தலைவனாக இருக்கமுடியாது. இயேசுவின் வாழ்வும், எமக்கு முன்னுதாரணங்களாக வழிகாட்டுகின்றன. அவருடைய அடிச்சுவட்டை நாம் பின்பற்றி நடந்தால், எமது பயணம் நிலைவாழ்வை உரிமையாக்கும் பயணப் பாதையாகமாறும்.

அமல நிறோஷன் அருள்தாசன்

---

### சோதிட பலன்

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள் தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

சோதிடஞானி

**சண்.மாஸ்டர்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

**சிங்கராசி**

**(மகம். பூரம், உத்தரம்- 1)**

சிங்கராசி அன்பர்களுக்கு குருபகவான் ஜூன் 13 வரை 10 ஆம் இடத்திலும பின்னர் 11ஆம் இடமாகவும மாற்றம் பெறுவார். சனீஸ்வரன் ஏப்ரல் 11 வரை 9 லும பின்னர் 10 ஆம இடமாகவும இருந்து பலன் செய்வார. 10 ஆம இடத்தில குருவினால் இடமாறறம, அலைச்சல் குடும்பததில் குழப்ப நிலை வீடு, வாகனம் இடம் மாறுதல தொழில் முயற்சிகளில அதிக பிரயாசம் போன்றவை இருந்து வரும். ஓய்வு.நித்திரை, சுகம், உணவு நன்மை மத்திமமாக இருக்கும. பணவிருத்தி கிடைக்கும்.தொழில் உத்தியோக விஷயங்களில் அரசாங்க நன்மை சேரவுள்ளது. சிலர் அலைச்சல் சிரமத்தால் தொழிலைக்கைவிடவும் எண்ணுவர். வெளிநாட்டுப் பயணம அதிக செலவுடன் அமையும். குடும்பததில் சில போது சச்சரவு தோன்றும். புத்திரரால் கலகம், குழப்பம் முரண்பாடுகள் தோன்றும், குழந்தைப் பாக்கியம் தாமதமாகும். சகோதரங்கள் கடன் பிரச்சினையை எதிர்கொள்வர். சிலருக்கு விவாகம் நடக்கப் பலன் உள்ளது. பதவியுயர்வு பெறுவோருக்கு இடமாற்றம்வரும். நோய்ப்பிரச்சினைதோன்றினாலும் விரைவில்குணமாகிவிடும்பெற்றோருக்கு பணலாபம் அமைந்து நன்மை இருக்கும்.

குரு ஜூன் 13ல்11 ஆம் இடமாகவு அமைவதால் நல்ல மாற்றங்கள் தோற்றிப பலன் நடக்கும். தொழில், உத்தியோகச் சிறப்பு சிலருக்கு வாய்க்கும். காணி, வீடு, வாகனம், மற்றும் கல்வி விஷயங்கள லாபமாகி அமைந்து நன்மை விளங்கும். காணி, வீடு விற்பதாலும், வாடகை வீட்டாலும் பணம் சேரும். வங்கியில சேமிப்பு உயர்ந்து நன்மை வரவுள்ளது. ஆண், பெண்கள் மத்தியில் உதவி ஆதரவு திருப்தியாக இருப்பதுடன்பெண்களால் சுகபோக விஷயங்களில் லாபம் அமையும். முயற்சிப்போருக்கு வெளிநாட்டுப் பயண வெற்றி வரவுள்ளது. கடன் தீரும, நோய்ப்பிரச்சினை நீங்கித்தேக சுகவிருத்தி உண்டாகும். விவாக நன்மை உள்ளது; சகோதர லாபம், குடும்ப சுகம் சிறப்பாக அமையும். குழந்தை நன்மைகிடைக்கும்; புத்திரர் பணவிருத்தி பெறுவர். சிலர்கல்வித்தேர்வுலாபம் அடைவர் உறவினர், நண்பர் உதவி லாபம் திருப்தியாக விளங்கும். குடி, புகை, போதை, கூட்டாளித்தனம் போன்றவை சில மாதங்கள் நன்மை அளித்து வரும். இதனால் சிலர் கடனாளியாகவும் பலன் உள்ளது.

சனீஸ்வரன் ஏப்ரல் 1 வரை 9 ஆம் இடம் அமைவதால் ரோகப் பிரச்சினை, தளம்பல் நிலை, தொழில் சிரமம், மதிப்புக் குறைவு, மேலதிகாரிகளால்தொல்லை. வாகன நஷ்டம் சிலருக்கு ஏற்படும். ஓய்வுநன்மைகுறையும். 2001, ஏப்ரல், 12 லிருந்து சனி 10ல் அமைவதால் பிரயாண விஷயம் தடங்கள் தோன்றி வெற்றி தரும்; வேலையாட்களால் நன்மையிராது சிரமம் ஏற்படும். நண்பர், உறவினர் ஆதரவாக நடப்பார்கள். பிள்ளைகள் சிலரால் எதிர்ப்பும், பிரச்சினையும் தோன்றவுள்ளன. செய்யும் தொழிலில் தடைத் தளம்பல் இருக்கும். புதிய தொழில் குறுக்கு வழி, மறைமுக தொழில் முயற்சியும் வரவுள்ளன. தேகசுகக் குறைவு, செலவினங்கள் அதிக மாக விளங்கும். தம்பதியினருக்குக் குடும்ப சுகக் குறைவு குறுக்கிட்டு அகலும், கல்விப் பிரச்சினை வரும்;

**ராகு, கேது பலன்**

2001 முழுவதும் 11ல் ராகு 5ல் கேது அமைவதால்அதிர்ஷ்டம்,பிரயாண நன்மை, புத்திரர் தகராறு, மனக்குழப்பம், சகோதரப் பிரச்சினை, நாரி, இடுப்பு, கால் இவற்றில் ரோகம் தோன்றும். தெய்வ நன்மை, புத்திரர் உணவுப் பிரச்சினை அமையும். 2002ல் அதிர்ஷ்டலாபம், தெய்வஎண்ணம் கட்டுப்பட்ட நிலைமை இருந்து வரும்.

**மற்ற கிரகங்கள் பலன் 2001 புரட்டாதி வரை**

வழக்கு வெற்றி, மதிப்பு குடும்பத்தில் சச்சரவு, தொழில்சிக்கல், காணி, மனை லாபம், காயங்கள் தோன்றுதல், கேணி, கடல், கிணறு இவற்றால் துன்பம், நஷ்டம் (புரட்டாதி) விளங்கும். அதிக பிரயாசம், பெண்கள் லாபம், பணவிருத்தி, ஆடை, ஆபரண நன்மை, புதிய பதவி, விலங்கு வேளாண்மை, விவசாயம்விருத்தி, கவர்ச்சியான வாழ்வு அமையும். கல்வி, தேர்வு லாபம், வியாபாரம், கலைத்துறை நன்மை, குடும்ப முரண்பாடுகள் ஏற்படும்,

**2001 ஐப்பசி- 2002 சித்திரை வரை**

பணவிருத்தி, பொன் பொருச் சேரல், சகோதரப்பிரச்சினை, காரிய சித்தி, காணி, வீடு, லாப நன்மை, குடும்பம முறுகல், பெண்கள்பகைள், தொழில் மாற்றம், தாய்சுகா குறைவு, மனப்பயம், அதிகம் ரஞ் செய்தல், வித்துவ மேன்மை, புதிய ஸ்தானம் தோன்றும், கடன்கிடைத்தல், புதிய முயற்சிகளால் லாபம் அமையும்;

**உத்தியோகத்தர்களுக்கு:-**

பதவியுயர்வு, இடமாற்றம் அமையும.

**வியாபாரிகளுக்கு:-**

நல்ல வருமான லாபமும், வாகனத் தொழில்விருத்தியும் ஏற்படும்.

**மாணவர்களுக்கு:**

அதிக பிரயாசம், கல்வித் தடை நிலை, தேர்வு வெற்றி இருந்து வரும்.

**தொழிலாளர்களுக்கு:**

முயற்சியுடன் வருமான லாப சுகம் கிடைக்கும்.

**முதியோருக்கு;**

சில போது மத்திம சுகம், பின்னர் நோய் நீங்கி சுகம் இருக்கும்.

(தொடரும்.)

---

## பதில் அமைச்சராக சத்தியப் பிரமாணம்

(கொழும்பு)

அமைச்சர் அலவி மௌலானா தனது அமைச்சுடன் மேலதிகமாக முஸ்லிம் சமய விவகார பதில் அமைச்சராகவும். அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (வ)

# மாணவர்களின் போராட்டம்

# பலமடங்கு விஸ்வரூபம் எடுக்கும்!

## அரசுக்கு மாணவர் ஒன்றியம் அறிக்கை

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ்பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவனும் முன்னாள் மாணவர் ஒன்றியச் செயலாளருமான திவ்வியன் மீதான அரச படைகளின் கைது நடவடிக்கையினை எதிர்த்தும் திவ்வியனை உடனடியாக விடுவிக்கக் கோரியும் முழுத்தமிழ் சமூகமும் அரசின் இத்தகைய இனவாத செயற்பாட்டிற்கு எதிராக கிளர்ந்தெழுந்துள்ளது. இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களும் ஒரு தமிழ் மாணவனுக்கு, ஒரு பல்கலைக்கழக மாணவனுக்கு மக்களின் நலனுக்காகச் செயற்பட்ட ஒரு தமிழ் மகனுக்கும் சம்பவித்து இருக்கின்ற மனித உரிமைக்கு மாறான அரசினது நடவடிக்கையினை கண்டித்து ஒன்று திரண்டுள்ளனர், இது மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளிலும் எதிர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அரசினது அராஜகத்திற்கு எதிரான செயற்பாட்டினை பழிவாங்கும் நோக்குடன் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட கைதினை எதிர்த்து யாழ்மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும், பாடசாலைகளும் தமது கல்விச் செயற்பாட்டினை தொடர்ச்சியாக பகிஷ்கரித்து வருகின்றதுடன் தொடர்ந்தும் முன்னெடுக்க உள்ளனர்.

மாணவர்கள் மீதான அரசின் மனித உரிமைச் செயல்பாடுகளினால் இன்று வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசம் எங்கும் கல்வி நடவடிக்கைகள் கல்வி சார் நிர்வாகச் செயற்பாடுகள் ஸ்தம்பிதது போயுள்ளன. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் தற்போது ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினைக்கு தீர்வு காண்பது பற்றி சற்றேனும் அக்கறை இன்றி பாரமுகமாயிருக்கின்றது

மாணவர்களின் தவணைப் பரீட்சைகள், உயர்தரப் பரீட்சைகள் நெருங்கி வருகின்ற இந்தக் காலப்பகுதியில் அரசினது இந்தப்பாராமுகமான செயற்பாடு அரசின் மீதான நம்பிக்கையீனத்தை மேலும் வலுப்படுத்தி வருகின்றது இன்று அனைத்தையும் இழந்து அநாதைகளாக நிற்கின்ற தமிழ் மக்களின் ஒரே ஒரு செல்வம் கல்விச்செல்வமே.

(2 ஆம் பக்கம் பார்க்க)

### திவ்வியனை...

முறைகளுக்கு இசைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பலாலி இராணுவ பாதுகாப்பு அதிகாரிகள் அமைச்சர் டக்ளஸிடம் கூறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காங்கேசன்துறை தடுப்புமுகாமில்தடுத்து வைக்கப்பட்டுள்ள திவ்வியனை ஆரைது தாயார், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் கஜேந்திரன், பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பேராசிரியர் சிற்றம்பலம் ஆகியோர் ஏற்கனவே சென்று பார்வையிட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ

### ஸ்ரீ. ல. சு கட்சி...

டத்தில் ஜனாதிபதியும் திஸாநாயக்காவும் வாய்த்தர்க்கத்தில ஈடுபட்ட பின்னர் திசாநாயக்க அங்கிருந்துவெளியேறியிருந்தார். இதேவேளை திசாநாயக்க அன்றிரவு தனது ஆதரவு எம்.பிக்களுடன் தனது இல்லத்தில் கூட்டமொன்றை நடத்திருந்தாரென்றும் அதில் 15 எம். பிக்கள் கலந்துகொண்டிருந்தனரென்றும் அறியப்படுகிறது.

இதுபற்றி ஏற்கனவே வலம்புரி செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே [ந

### ரணில்...

போது தேசியஅரசின்பிரதமர் பதவியைத் தனக்குத்தருமாறு ஜனாதிபதியிடம் ரணில் கோரியதாக தற்போது தெரியவந்துள்ள செய்தியினால் கட்சிக்குள் பிளவுபடும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளதாக ஸ்ரீகோத்தா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்காவிற்கு எதிராக கட்சிக்குள் செயற்படும் காமினி அத்துக்கோறள, கருஜெய சூரியா ஆகியோர் தம்வசம் 29 உறுப்பினர்கள் இருப்பதாகவும் மற்றும்நடுநிலைமை வகிக்கும் ஏனைய உறுப்பினர்களில் 20 பேரைத் தம்பக்கம் ஈர்க்கலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே ஐக்கிய தேசியக் கட்சி பிளவுபடும் அபாயம் தோன்றியுள்ளதாக கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் மீது இடம்பெற்றதாகக்கூறப்படும் தொடர்பான இரகசிய விசாரணைக்கு தெல்லிப்பளை புனர்வாழ்வு முகாமில்தடுத்து வைக்கப்பட்ட மூன்றுதமிழ் இளைஞர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைகொழும்புக்கு அழைத்துச்செல்ல தற்கான ஏற்பாடுகளை முகாம் பொறுப்பதிகாரி மேற்கொண்டுள்ளார். (வ)

### அம்பாறையில்...

மாவட்டத்தில ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது, ஆகிய பகுதிகளில் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால பூரண வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாடசாலைகளுக்குமுன்பாக பொலிஸார் நிற்பதற்கு ஆசிரியர்சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் விடுதலை செய்யப்படவேண்டும அல்லது அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவேண்டும்.

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் தபஞ்சலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திவ்வியனின் கைதினால் பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன. பாடசாலைகளுக்கு முன்பாக பொலிஸார் நிறுத்தப்பட்டிருப்பது சுதந்திரமான கல்விச்செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும்.

எனவே இவற்றுக்கு தீர்வு காண படை அதிகாரிகள், பாராளுமன்றஉறுப்பினர்கள், உயர்கல்வி அமைச்சர் பல்கலைக்கழக மானியஆணைக்குழுவினர் ஆகியோருடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் இது தொடர்பாக இன்று நடைபெறும் தமிழர்ஆசிரியர் சங்ககூட்டத்தில அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படுமென்றும் தெரிவித்துள்ளார். [ந-ு]

## வடக்கு கிழக்கு மாகாணத்தின் 13வதுதேசியவிளையாட்டு போட்டிகள் ஆரம்பம்

வடக்கு கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் 13வது விளையாட்டுப் போட்டி இன்று காலை ஆரம்பமாகவுள்ளது.

இவ்விளையாட்டுப்போட்டியில் யாழ்ப்பாணம் மன்னார் வவுனியா, மட்டக்களப்பு, திருமலை அம்பாறை ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த 376 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

யாழ் மாவட்டத்திலிருந்து 38 விளையாட்டுக் கழகங்கள் இம்முறை முதன்முதலாக இதில் கலந்துகொள்கின்றன.

விளையாட்டுப் போட்டிக்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதிபிரதம செயலாளர் எஸ் சிவபாலனும், பரிசளிப்பு விழாவிற்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலர் ஜி. கிருஷ்ணமூர்த்தியும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

## இராணுவவண்டி மோதி குடும்பப் பெண் பலி

### செட்டிகுளத்தில் சம்பவம்

செட்டிக்குளம பகுதியில இராணுவ 'ட்ரக்'' வண்டி ஒன்று மோதியதில் இளம் பெண ஒருவர் பலியானார்.

நேற்று முன் தினம இரவு 10 30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் போது தனபாலசிங்கம் யோகேஸ்வரி (வயது43) என்பவரே பலியானவராவர் அவரது மகன் கிருஷாந்தன் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: விபத்தில் பலியானயோகேஸ்வரிதனதுமகன் கிருஷாந்தனுடன்(வயது 14,)கோயிலுக்கு சென்றுவிட்டு வீடுதிரும்பிக் கொண்டிருந்த போது வெளிச்சமெதுவுமின்றி வந்தட்ரக் வண்டி இவர்களை மோதியது இதனால் இருப்பில் பலத்த காயமடைந்த யோகேஸ்வரி ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்ட பின் அங்கு மரணமானார் (ம)

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம)

திருமறைக் கலாமன்ற கலைத்தூது மணி மண்டபத்திலின்று மாலை 4.30மணிக்கு நடைபெறும கருத்தரங்கில்புலம்பெயர்சூழலில தமிழர்கள் என்ற கருப் பொருளில் அருட்கலாநிதி அ.ஜெயசேகரமகருத்துரை வழங்குவார் (ந-104

## மயங்கி வீழ்ந்து மரணம

நேற்றைய தினம சுதுமலை அம்மன் கோவில் பகுதியில் வீதியால் சென்றுகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து மரணமானார்,

இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஜோசப் தேவராஜா (வயது 55) என்பரே மரணமானவராவார். இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ் போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-10-6-8)

## மிதிவெடியில் காலிழப்பு

அரியாலை மருதங்குளம் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய ஒருவர் காலை இழந்துள்ளார்.

நேற்றுக்காலை 10 மணியளவில அப்பகுதியில வீடு ஒன்றை துப்பரவுசெய்யும் பணியில ஈடுபட்டிருந்த தொழிலாளியான குமாரசாமி வைரவநாதன் (வயது 52) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே இம்மிதிவெடிச்சம்பவத்தில் சிக்கி காலையிழந்தவராவர். தற்போது யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-104)


## மரண அறிவித்தல்

### சின்னையா திருநாவுக்கரசு

(திருநாமு)

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், நிற்சாமம் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா திருநாவுக்கரசு அவர்கள் 14-07-2001 இல் அகால மரணமானார்.

இவர் காலம்சென்ற சின்னையா இலட்சுமி ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், கௌசலாதேவியின் அன்புக் கணவரும் மாதாந்த. பொன்னன், லட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும், சுமிதி. சுதாகரன் [சுவிஸ்], சுபாலினி [சுவிஸ்], சுசீதா [ஹொலண்ட்] ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னுத்துரை, குணரட்னம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெகநாதன் [விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சண்டிலிப்பாய் கோட்டம்], சிவஞானசேகரம் [சுவிஸ்] சதீஸ்காந்தன் [ஹொலண்ட], ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திலக்ஷன், ஜெலக்ஷா, ஜெயலக்ஷனா, சுவர்ணா [சுவிஸ்], தினிஷ [ஹொலண்ட] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் விக்கினேஸ்வரா வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று 15-07-2001 ஞாயிறுக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும ஏற்றுக் கொள்ளுமபடி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:- கு. ஜெகநாதன் (மருமகன்)
விஞ்ஞான ஆசிரிய ஆலோசகர் சண்டிலிப்பாய் கோட்டம்.

விக்கினேஸ்வரா வீதி,
நிற்சாமம்,
சங்கானை. (கி-2222)

ராஜா
யாழ்ப்பாணம்
கடைசி வாரம்
லக்கிஸ்டார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ், மீனா, நகமா மற்றும பலர் நடித்த
STR பிலிம்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2 30 [பு நே.]
சனி ஞாயிறு 10-30, 2-00, 5 00 [பு. பே]
(கி-2125)

நாகம்ஸ்
(சுன்னாகம)
சரத்குமார், மீனா, வடிவேல் நடித்த
மாயி
(இனிய பாடல்கள் நிறைந்த படம்)
(காட்சிகள)
தினசரி 11-00, 2-30
(4326

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த சுகாதார முறைப்படி உணவிற்கும வைத்தியர்களுக்கும் விஷேசமாக தயாரிக்கப்பட்டது,
சுத்தமான
வி.எஸ்.பி. நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும
பரிமளா ஸ்ரோர்ஸ்
26?, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1986)


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது